சீயாக்காய்ப்பவுடர் பாவனையாளர்களே!
காவேரி
சீயாக்காய்ப் பவுடரை
கேட்டு வாங்குங்கள்
சுத்தமான
சீயாக்காய்ப்பவுடர்
என்று பாவித்தவர்கள்
கூறுகிறார்கள்.
[31665]

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

அளவுப் பிரமாணத்தின் படி
6 வகை
இயற்கை பொருள்களை
கொண்டு தயாரிக்கப்படுவது
காவேரி
சீயாக்காய்ப்பவுடர்
ஒரு முறை பாவியுங்கள்
உண்மையை உணர்வீர்கள்
[31665]

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 15 ஞாயிற்றுக்கிழமை (31 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 245

# வவுனியா ரயில் நிலையம் அருகில் குண்டு வெடித்தது!

## மூன்று பொலீஸார் காயம்

முச்சந்தி முரளி



போலிப் பத்திரிகை அடித்து ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கினம் பாருங்கோ...!

யாழ்ப்பாணம், ஜூலை 31

வவுனியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மூன்று ஸ்ரீலங்கா பொலீஸார் உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு வவுனியா ரயில் நிலையத்திற்கு அருகே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது. அங்கு காவல் கடமையில் இருந்த 3 ஸ்ரீலங்கா பொலீஸாரும் இரு மக்களுமே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்த இருவரும் தேர்தல் பிரசாரங்களைச் செய்வதற்காக வவுனியாவிற்கு வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பை அடுத்து வவுனியா நகர் பகுதியில் ஸ்ரீலங்கா பொலீஸார் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதுடன் அப்பகுதியில் தமது பாதுகாப்பையும் பலப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து வவுனியாப் பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது.

## சமூக வளர்ச்சிக்கு தொண்டாற்றிய யாழ். மத்திய கல்லூரி

### தேசியத் தலைவர் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம், ஜூலை 31

கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டு காலம்வரை கல்விப்பணி புரிந்து எமது சமூகத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இந்தக் கல்லூரி ஆற்றிய அருந்தொண்டு பாராட்டுதற்குரியது.

இவ்வாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி விடுத்த ஆசிச் செய்தியில், தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

தலைவர் தனது ஆசிச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:-

நீண்டதொரு வரலாற்றையும், நிறைவான கல்விப் பாரம்பரியத்தையும் கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்தக் காலத்திலிருந்தே தமிழ் மண்ணில் அறிவு விளக்கு ஏற்றிவைத்து, தமிழரின் தேசிய விழிப்பிற்கு வெளிச்சம் காட்டிவரும் பழம்பெரும் கல்விக்கூடங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முக்கிய இடத்தை வகிக்கிறது. கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டு காலம்வரை கல்விப் பணிபுரிந்து, எமது சமூகத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இந்தக் கல்லூரி ஆற்றிய அருந்தொண்டு பாராட்டுதற்குரியது.

தமிழீழக் கல்வித் துறையின் தூண்களாக நிற்பவை கல்லூரிகள். இந்தக் கல்லூரிகளின் ஆதார பலத்தில்தான் எமது இளம் சமூகத்தின் கல்விவாழ்வு தங்கிநிற்கிறது. கல்லூரிகள் வளர்ச்சிபெற்று திறம்படச் செயலாற்றினால் கல்வித்துறை மேம்பாடு காணும் என்பது திண்ணம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது கல்விப் பணியைத் தொடர்ந்து தமிழீழ தேசத்தின் உயர்ச்சிக்கு உழைக்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

## பி. பி. ஸி செய்தியாளர் ஆப்கனில் படுகொலை

லண்டன், ஜூலை 31

ஆப்கானிஸ்தானில் உள்ள பி. பி. ஸி. செய்தியாளர் மிர்வைட் ஸ்ரானின் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரதமர் ஹெக்மெத்தியாரை சந்தித்து பேட்டி ஒன்றை எடுத்துக் கொண்டு திரும்பியவேளை காபூலில் வைத்து அவர் கடத்திச் செல்லப்பட்டார். அவரது சடலம் பின்னர் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தப் படுகொலையை பி. பி. ஸி. செய்தி நிறுவனம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதி ரபானியின் படைகளுக்கும் பிரதமர் ஹெக்மெத்தியாரின் படைகளுக்கும் இடையில் சண்டை நடப்பது தெரிந்ததே. (இ-ஐ)

## சென்னையில் வெங்கட்ராமன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

முன்னாள் இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் தனது நூல் ஒன்றில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைப் பற்றி தெரிவித்துள்ள சில கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று சென்னை

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

சுழிபுரம், ஜூலை 31

நேற்று சனிக்கிழமை பகல் பதினொரு மணி முதல் மாதகல், காரைநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுழிபுரம் திருவடிநிலை கரையோரங்களை நோக்கியும் கில்லாலை சாந்தைப் பகுதியை நோக்கியும் பத்துக்கு மேற்பட்ட ஷெல்களை ஏவினர். சுமார் ஒரு மணி நேரம் இத்தாக்குதல் இடம்பெற்றது.

(இ-28-15)

# அமைச்சர் அதிகாரியை கைது செய்ய உத்தரவு!

## பொ. ஐ. முன்னணி ஆதரவாளர் கொலை

கொழும்பு, ஜூலை 31

அனுராதபுரத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளரான ஆர். ஐ பி பியசேன என்பவரின் கொலையுடன் நேரடியாக தொடர்பு கொண்ட ஐ. தே. கவின் அமைச்சரான ஏ எம். எஸ். அதிகாரியை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் தாக்கப்பட்ட பியசேன நேற்று மரணமானார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான பியசேனாவை அனுராதபுரத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து அமைச்சர் ஏ.எம்.எஸ் அதிகாரியும், அவரது குழுவினரும் தாக்கினர். இதனை நேரில் கண்ட அவரது உறவினர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர், என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-ஐ-6)

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

அரசாங்க சேவையில் எழுதுவினைஞர்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

எழுதுவினைஞருக்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 25 ஆம் திகதியும், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளருக்கான பரீட்சை 27 ஆம் திகதியும் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

புதிய திகதிகள் பற்றி பரீட்சைத் திணைக்களம் பின்னர் அறிவிக்கும் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

சந்திரிகாவை அவதூறு செய்யும் செய்திகளுடன்

# அத்தவின் பெயரில் 2 லட்சம் போலி பத்திரிகை பிரதிகள்

## கோட்டைப் பொலீஸார் கைப்பற்றினர்

சந்திரிகாவின் பெயருக்கு மாசு கற்பிக்கும் நோக்குடன் கொழும்பில் உள்ள அச்சகம் ஒன்றில் அச்சிடப்பட்ட இரண்டு லட்சம் போலிப் பத்திரிகைப் பிரதிகளை நேற்று அதிகாலை 3 மணியளவில் கோட்டைப் பொலீஸார் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகிறது.

பிரபல சிங்களப் பத்திரிகையான 'அத்த' வின் பெயரில் அந்தப் போலிப் பத்திரிகைகள் அச்சிடப்பட்டிருந்தன.

கொழும்பில் அனந்திபோல் வீதியில் உள்ள விஜயானந்த அச்சகத்தில் அவை அச்சிடப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கனவான்களின் அரசியல் பற்றிப் பேசும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு, மக்களின் மனங்களைக் கவர்ந்த 'அத்த' போன்ற பத்திரிகையின் பெயரைப் பயன்படுத்தி பொய்யான பத்திரிகையை வெளியிடுமளவு மிகக் கீழ்த்தரமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்று இந்த சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட 'அத்த' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கொக்குபண்டார வனிகசேகரா வெரித்தாஸ் வானொலிக்குத் தெரிவித்தார்.

(இ-ஐ-6)

## சாகட்டும் என்று சொல்லி விட்டுச் சென்றனராம்!

கொழும்பு ஜூலை 31

கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற அமைச்சர் ஏ. எம் எஸ். அதிகாரி பியசேனாவின் வீட்டுக்குள் புகுந்து அவரை வெளியில் இழுத்து வந்து கடுமையாகத் தாக்கினர் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அனுராதபுர மாவட்டக் குழுவின் தலைவர் பேடி திஸாநாயக்கா தெரிவித்தார்.

அமைச்சர் அதிகாரியுடன் கூட வந்தவர்களும் பியசேனாவை மாறி மாறித் தாக்கினர் என்றும்—

பியசேனாவின் கழுத்தில் இருந்து இரத்தம் பாய்ந்ததாகவும்— யாரும் அவருக்கு உதவக் கூடாது அவரை அப்படியே சாகவிடுங்கள் என்று அவர்கள் கூறிச் சென்றனர் என்றும் பேடி திஸநாயக்கா மேலும் தெரிவித்தார். (இ-ஐ-6)

மட்டக்களப்பில

## மீனவரை விரட்டும் ஸ்ரீலங்கா படையினர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழ் மீனவர்களை ஸ்ரீலங்கா படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விரட்டுகின்றனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது மட்டக்களப்பு வாவியைச் சுற்றி ஸ்ரீலங்கா படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

பரீட்சைக்கு விண்ணப்பிக்க

## தபாலகங்களுக்கு சென்றோர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்புவதற்குரிய இறுதி நாளான நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தபாலகங்கள் சிலவற்றுக்குச் சென்ற விண்ணப்பதாரர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகச் செலுத்தப்படும் கட்டணத்துக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டு புத்தகங்கள் தபாலகங்களில் இல்லை என அங்கு கூறப்பட்டதை அடுத்தே விண்ணப்பதாரர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், இணுவில், சுத்தரோடை, சுன்னாகம், மல்லாகம் ஆகிய பகுதிகளில் உள்ள சில தபாலகங்களுக்குச் சென்ற விண்ணப்பதாரர்களுக்கு இவ்வாறு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-13)

## நிலக்கண்ணி வெடிக்கு 16 இந்திய பொலீஸார் பலி

புதுடில்லி, ஜூலை 31

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் 16 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

மத்திய பிரதேசத்தில் அரசுக்கு எதிராகச் செயற்படும் நக்சலைட் கெரில்லாக்களே இத்தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பொலீஸார் தமது காவல் நிலையத்தை நோக்கி வான் ஒன்றில் சென்று கொண்டிருந்த சமயம் இத்தாக்குதல் இடம்பெற்றது. (இ-4)

# ஆட்சி மாற்றத்தை தடுக்க வன்செயலுக்கு அரசு முஸ்தீபு

கொழும்பு, ஜூலை 31

நாட்டில் அமைதியாக இடம்பெறவுள்ள ஆட்சி மாற்றத்தை தடுப்பதற்கு ஐ. தே. கட்சி வன்செயலை ஆயுதமாக்கிக் கொண்டுள்ளது என்ற சந்தேகம் தன்பகுதியில் வலுவடைந்து வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான மக்கள் நாட்டில் ஆட்சி மாற்றத்தை விரும்பும் இவ்வேளையில் அதற்கு எதிராக வன்செயலை அரசு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துமானால் நாட்டில் மோசமான உள்நாட்டு குழப்பம் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ ஐ-6)

## குடும்ப அட்டை திருத்தம் கால எல்லை தளர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 31

குடும்பப்பதிவு அட்டை திருத்தம் செய்வதற்கான கால எல்லை எதிர்வரும் ஆகஸ்ட் 15 ஆம் திகதியுடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும்—

பொதுமக்களின் வசதி கருதி மறுஅறிவித்தல் வரும் வரை அந்தக் கால எல்லை தளர்த்தப்பட்டிருப்பதாக போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் பொதுமக்களின் கவனத்துக்கு அறியத்தருகின்றனர். (ஐ)

## ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை நாளை

கொழும்பு, ஜூலை 31

ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சை நாளை முதல் நடைபெறவுள்ளது இந்தப் பரீட்சையை நாடு முழுவதும் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக பரீட்சைத் திணைக்களம் நேற்று அறிவித்தது.

பொதுத் தேர்தல் காலத்திலும் பரீட்சை தடையின்றித் தொடர்ந்து நடைபெறும் எனத் தாம் நம்புவதாகப் பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் ஆயிரத்து 30 பரீட்சை நிலையங்களில் ஒரு லட்சத்து ஐயாயிரத்து 792 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையில் தோற்றுகின்றனர்.

பொதுத் தேர்தலை ஒட்டி இந்தப் பரீட்சை இரு கட்டங்களாக நடத்தப்படுகிறது. (ஐ)

# மீன்பாடும் தேன் நாட்டில் வாக்காளர் அழுகிறார்கள்

## வெரித்தாஸ் உண்மையான எண்ணங்கள் விமர்சனம்

மணிலா, ஜூலை 31

தமிழ்மக்கள் உரிமை மறுக்கப்பட்டு நிற்க, தமிழ் அரசியல்வாதிகள் தேர்தல் மூலம் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றுவிடவேண்டும் என்பதிலேயே ஆர்வமாக உள்ளார்.

மட்டக்களப்பு நகரில் வேட்பாளர்கள் வீடு வீடாக ஏறி தங்களை ஆதரிக்குமாறு வாக்காளர்களைக் கேட்டு வருகிறார்கள். ஆனால் மீன்கள் பாடும் நகர் என அழைக்கப்படும் மட்டக்களப்பு நகரில் மீன்கள் பாடலாம். ஆனால் வாக்காளர்களோ அழுகிறார்கள்.

"மீன்கள் பாடுகின்றன வாக்காளர்கள் அழுகிறார்கள்" என்ற தலைப்பில் வெரித்தாஸ் வானொலியில் ஒலிபரப்பான உண்மையின் எண்ணங்களில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது:

கடந்த 4 ஆண்டுகளில் மட்டக்களப்பு நகரில் 7 ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர். சராசரியாக அங்குள்ள ஒவ்வொரு தமிழ் குடும்பமும் ஒரு நபரை இழந்துள்ளது.

சுமார் 7 லட்சத்து 60 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட மட்டக்களப்பில் 80 சதவீதம் மட்டுமே அரசின்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிகண்டி

# மருதாம்புலம் அருள்தரு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான

உற்சவகாலச் சிறப்பிதழ் (உற்சவ ஆரம்பம்: 31 - 07 - 1994)


அன்னை பத்திரகாளித்தாயே அருள் சுரந்து தாருமம்மா!

**அம்பிகை மின் அமைப்பாளர்** பொலிகண்டி.

**சரவணாஸ் உற்பத்திகள்** பொலிகண்டி

**தரண் சவுண் சேவிஸ்** பொலிகண்டி

**ஆதவன்** மிதிவண்டி உதிரிப் பொருள் வாணிபம் நெல்லியடி

**ஓம் சரவணன்** மிதிவண்டி உதிரிப் பொருள் வாணிபம் நெல்லியடி

**கலைவாணி கண்ணாடி களஞ்சியம்** நெல்லியடி

**திவ்யா - யஸ்மின்** வெற்றிலைக் கடை இல. 5, சந்தை, நெல்லியடி

**யோ. அலெக்சாண்டர் மிக்ஸ் ஸ்ரோர்** கரவெட்டி

**ஜனனி வெதுப்பகம்** முடக்காடு, நெல்லியடி

**அய்ங்கரா வெதுப்பகம்** நல்லியடி

**திருமால் வெதுப்பகம்-நிசாந் விற்பனை நிலையம்** நெல்லியடி

**சுதர்சனம் 'ஐடியல்'** நெல்லியடி


## மருதாம்புல பதியில் அருளாட்சி புரியும் மகிமைத் தாய் ஸ்ரீபத்திரகாளி அம்பாள்

ஈழமணித் திருநாட்டின் தலையாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து 20 மைல் தொலைவில் வடமராட்சி — பொலிகண்டி கிராமத்தில் சைவசமய மரபு முறைகள் சிறந்து விளங்கும் மருதாம்புல பதியில் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சகல ஆன்மாக்களும் உய்யும் பொருட்டு உருவத்திருமேனி தாங்கி அருளாட்சி செய்கின்றாள்.

இவ்வாலயம் யாழ்ப்பாணம் — பருத்தித்துறை வீதி, பொலிகண்டி சந்தியில் இருந்து தெற்கே அரைமைல் தூரத்தில் அழகிய பனந்தோப்பு சூழலில் அமைந்துள்ளது. இந்த ஆலயம் சுமார் 350 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறியக்கிடக்கிறது.

ஆரம்பத்தில் இவ்வாலயம் இருக்கும் மருதாம்புலம் என்னும் காணியின் மத்தியில் ஒரு பாரிய இலுப்பை மரம் இருந்ததாகவும் —

அந்த இலுப்பை மரத்தில் இருந்து இரவு வேளைகளில் பிரகாசமான ஒளி தென்பட்டு வந்ததாகவும் —

இது அயலார்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நாள் பத்திரகாளி அம்மாள் மூதாட்டி ஒருவரின் கனவிலே தோன்றி ''என்னை இன்னும் உங்களுக்குத் தெரியவில்லையா?'' — என்று கூறி



தனது பூரணவடிவத்தை காட்டியதுடன் —

அந்த இலுப்பை மரத்தடியில் தன்னை வைத்துப் பூசிக்கும்படியும் அருளினார்.

அன்று முதல் மக்கள் அவ்விடத்தை துப்புரவு செய்து சிறுகுடில் அமைத்து அம்பாளை வழிபடத் தொடங்கினார்கள்.

திருவருளும், குருவருளும் பெருகக் கால ஓட்டத்தில் ஆலயம் சிறப்புற்று விளங்கியது. சிறிது காலம் செல்ல கண்ணாம்புக் கற்களினால் அமைந்த சிறிய கட்டடம் பத்திரகாளி அம்பாளின் பஞ்சலோகத்திலான முகத்தையும், செம்பிலான சூலாயுதத்தையும் வைத்து மக்கள் வழிபட்டு வந்தனர்.

இக் காலத்தில் மகா சிவராத்திரி, வைகாசிப் பொங்கல், பிள்ளையார் கதை ஆகியன இந்த ஆலயத்தில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

இக் காலகட்டத்தில் ஆகம விதிக்கமைய 1960 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆலயம் கட்டுவதற்காக கல்லிடும் வைபவம் நடைபெற திருவருள் கூடியது.

தற்போது இவ்வாலயம் சாஸ்திரவிதிகளுக்கமைய அம்பாளின் கருணையாலும் அக்கிராம மக்களின் அயராத முயற்சியினாலும் ஒரளவு பூர்த்தியாகி 1977 ஆம் ஆண்டு சித்திரை மாத விசாக நட்சத்திரத்தில் குடமுழுக்கு விழா சிறப்புற நடைபெற்றது.

அம்பாளின் திருவருளினால் 1978 ஆம் ஆண்டு முதல் ஆடிப் பூரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு பத்துத் தினங்கள் திருவிழா சிறப்புற நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயத் திருப்பணிக்கு இக்கிராம மக்களும் வெளியூர் மக்களும் தங்களா
(5 ஆம் பக்கம் பார்க்க)

— அம்பாளின் அருள் வழி நிற்கும், ஆலய பரிபாலனசபை

### தெய்வீக சொற்பொழிவு

வருடாந்த உற்சவத்தின் போது தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு ''காண்பதெல்லாம் சக்திமயம்'' என்னும் தொடர் தெய்வீகச் சொற்பொழிவை உடுப்பிட்டி அ.மி.த. பாடசாலை ஆசிரியர் திரு. அழகதுரை ஜெகதீஸ்வரன் (B.B.A) நிகழ்த்துவார் என்பதை அறியத்தருகின்றோம்.

**மலர் ஆக்கம்:**
தேவஸ்தான பிரதமகுரு
சிவசிறீ ச. வைத்தியநாதக் குருக்கள் (பொலிகண்டி)
செ. சின்னையா (பொலிகண்டி)

**மலர் வெளியீடு:**
ஆலய பரிபாலனசபை


அன்னை பத்திரகாளித்தாயே அருள் சுரந்து தாருமம்மா!

**சுபாஸ் வெதுப்பகம்** நெல்லியடி

**கணேசா வெதுப்பகம்** உடுப்பிட்டி

**அஜந்தா வெதுப்பகம்** நாவலர் மடம், நெல்லியடி

**அம்பிகா வர்த்தக நிலையம்** நெல்லியடி

**சரவணந்தா வர்த்தக நிலையம்** நெல்லியடி

**விநாயகர் வர்த்தக நிலையம்** நெல்லியடி

**கிருஷ்ணானந்தம் பலசரக்குக் கடை** நெல்லியடி

**உஷா வெதுப்பகம்** பொலிகண்டி

**ரட்ணம்ஸ்** நெல்லியடி

**சிவம் ஸ்ரோர்ஸ்** பிரதான வீதி, நெல்லியடி

**ராஜ் ஸ்ரோர்ஸ்** கால்நடை தீன் விற்பனை நிலையம் நெல்லியடி

**அம்பிகை சனசமூக நிலையம்** பொலிகண்டி

**விண்மீன் அங்காடி** நெல்லியடி

**புதிய இதயன்ஸ்** நெல்லியடி


## மத அடிப்படைவாத அலையில் தலைமறைவாகும் படைப்பாளிகள்

கட்டை முடி, காருண்ய முகம் எவரையும் எளிதில் கவர்ந்து விடும் அழகிய தோற்றமுள்ள அந்தப் பெண் எழுத்தாளரின் தலைக்கு பங்களாதேஷின் இஸ்லாமிய அடிப்படை வாதிகள் இன்று விலையாக 2 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் வழங்கப்படுமென அறிவித்திருக்கின்றார்கள்.

''இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆன் சமகாலத்துக்கு ஒவ்வாதது. எனவே அது முற்றிலும் மாற்றப்பட வேண்டும் என்று அண்மையில் பத்திரிகைப் பேட்டி ஒன்றில் அவர் கூறிய கருத்து அவரது உயிருக்கே விலை பேச வைத்துவிட்டது.

குர்ஆனின் வாசகங்கள் ஒவ்வொன்றும் நபிகள் நாயகத்தின் வாயால் உரைக்கப்பட்ட புனிதமான வார்த்தைகள் என நம்பும் இஸ்லாமிய அடிப்படை வாதிகள் நஸ்றீனின் இந்தக் கருத்துக்களால் கொதிப்படைந்துள்ளனர்.

இஸ்லாத்தை அவமதித்து விட்டதாக குற்றஞ்சாட்டி, அவரை கைது செய்யுமாறு டாக்காவில் உள்ள நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டது. இதனையடுத்தும், இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் மரண அச்சுறுத்தலை தொடர்ந்தும் நஸ்றீன் தற்போது தலைமறைவாகியுள்ளார்.

32 வயதான தஸ்லீமா நஸ்றீன் ஒரு டாக்டர். தான் எந்த மதத்தையும் சாராதவர் என்று தற்பொழுது கூறிவரும் அவர் — பிறப்பால் முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவர். மதத்தின் சட்டங்களுக்கு கட்டுப்படுத்தப்பட்டவராக சிறுவயது முதல் வாழ்ந்த அவர் அவற்றை வெறுத்து ஒதுக்கும் பெண்ணிலைவாதியாக தோற்றம் கொண்டார்.

மதத்தின் பெயராலும், பாலியல் ரீதியிலும் பெண்கள் இழிவுபடுத்தப்படும் சமூக அவலங்களை தனது எழுத்துக்கள் மூலம் அவர் விமர்சிக்கத் தொடங்கினார்.

மூன்று தடவை திருமணம் செய்து, பின்னர் விவாகரத்துச் செய்து கொண்ட நஸ்றீன் தனது மணவாழ்வில் ஏற்பட்ட கசப்புகளும் — பெண் உடற்கூற்று மருத்துவராக இருந்ததால் தான் சந்தித்த பெண்களின் அவலங்களும் தன்னை எழுதத் தூண்டின என்றும் கூறுகிறார்.

இதுவரை 20 க்கு மேற்பட்ட நூல்களை நஸ்றீன் எழுதியுள்ளார். இஸ்லாத்தின் சில சட்டங்கள் பெண்களை அடிமைப்படுத்துவதாகவும், திருமணம் என்பது இந்த சமூகத்தில் 'பெண்களின் அடிமைச் சாசனம்'' என்றும் அவர் கூறிவருகிறார்.

### லஜ்ஜா

நஸ்றீனை பழிவாங்குவதற்கு தருணம் பார்த்திருந்த இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு அவர் கடைசியாக எழுதி வெளியிட்ட 'லஜ்ஜா' (வெட்கம்) என்னும் நாவல் ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

1992 ஆம் ஆண்டு டிசம்பரில் இந்தியாவில் அயோத்தியில் இருந்த பாபர் மசூதி இந்துமத அடிப்படை வாதிகளால் தரை மட்டமாக்கப்பட்ட போது, பங்களாதேஷில் உள்ள சிறுபான்மை இந்துக்கள் இஸ்லாமிய அடிப்படை வாதிகளால் துன்புறுத்தப்பட்டனர்.

அந்த சமயத்தில் இந்தப் பெண் ஒருவருக்கு நேர்ந்த சோக சம்பவத்தை தனது ''லஜ்ஜா'' நாவலின் மூலம் நஸ்றீன் வெளிப்படுத்தியுள்ளார். அந்த நாலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்லாமிய அடிப்படை வாதிகள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அவர் கைது செய்யப்பட வேண்டும் என குரல் எழுப்பினர். இதனால் ஏற்படக் கூடிய நெருக்கடியை தவிர்ப்பதற்கு அந்த நூலை பங்களாதேஷ் அரசு தடை செய்தது. இலங்கை உட்பட மற்றும் சில இஸ்லாமிய நாடுகளும் இந்த நூலைத் தடை செய்துள்ளன.

ஆயினும், அந்த நூலின் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரதிகள் ஏற்கனவே விற்பனையாகி விட்டன பங்களாதேஷில் அந்த நூலுக்கு எழுந்துள்ள எதிர்ப்பலைகள் சர்வதேச ரீதியில் அந்த நூலையும் நஸ்றீனின் பெயரையும் பிரபல்யமாக்கியுள்ளன.

பங்களாதேஷில் உள்ள புத்திஜீவிகள் பலரும் பெண்கள் இயக்கங்களைச் சார்ந்தவர்களும் அரசின் தடை உத்தரவை கண்டித்துள்ளனர். இந் நிலையில் அவரது பத்திரிகைப் பேட்டி வெளியானது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

நஸ்றீனின் சர்ச்சைக்குரிய பேட்டியை வெளியிட்ட கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகைக்கு தலைமறைவாகியிருக்கும் நஸ்றீன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்: இஸ்லாத்தின் சில சட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று தாம் கூறியதை முஸ்லிம் அல்லாத — அந்த பத்திரிகையாளர் தவறாகப் புரிந்து கொண்டு குர்ஆனை மாற்ற வேண்டும் எனத் தாம் கூறியதாக எழுதி விட்டார் என்று நஸ்றீன் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையின் அந்தப் பேட்டியை ''பங்களாதேஷ் ரைம்'' மறுபிரசுரம் செய்தது. அதனைத் தொடர்ந்து, இஸ்லாமிய தீவிரவாதிகள் டாக்கா வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இஸ்லாத்தை நிந்தனை செய்துவிட்ட நஸ்றீன் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். இல்லையேல் அவரைக் கொலை செய்வோம் என அவர்கள் கோஷமிட்டு வருகின்றனர்.

### தூதரகத்தில் தஞ்சம்

இதற்கிடையில் - நஸ்றீன் டாக்காவில் உள்ள மேற்கு நாட்டு தூதரகம் ஒன்றில் மறைந்து [illegible] திரிகை ஒன்றில் வெளியான தகவலை அடுத்து — இஸ்லாமிய அடிப்படைவாதிகள் வெளிநாட்டுத் தூதரகங்களை முற்றுகையிட கூடும் என அஞ்சி அவற்றின் பாதுகாப்பை பங்களாதேஷ் அரசு பலப்படுத்தியுள்ளது.

அவர் அமெரிக்க தூதரகத்தில் மறைந்திருப்பதாக வதந்திகள் வெளிவந்ததால் ஆத்திரமடைந்த இஸ்லாமிய அடிப்படை வாதிகள் அமெரிக்க அதிபர் பில்கிளின்டனுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு டாக்காவில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்த 4 ஆம் திகதி டாக்காவில் உள்ள பிரதமர் பேகம் காலிதா ஷியாவின் அலுவலகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்ற ஆயிரக்கணக்கான இஸ்லாமிய அடிப்படை வாதிகளை பொலீஸார் தடுத்து நிறுத்தினர். நஸ்றீன் விரைவில் கைது செய்யப்படாவிட்டால் அடுத்த மாதம் 4 ஆம் திகதி முதல் நாடு தழுவிய போராட்டங்களை நடத்தப் போவதாக அவர்கள் எச்சரித்துள்ளனர்.

### சல்மான் ருஷ்டி ஆதரவு

தவிப்பட்ட எழுத்தாளர் ஒருவருக்கு இஸ்லாமிய அடிப்படை வாதிகளால் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்படுவது உலகில் இது முதல் தடவை அல்ல.

'சாத்தானின் கவிதைகள்' என்ற தனது நூலின் மூலம் பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மான் ருஷ்டி நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டதும் — அவரது உயிரைப் பறிக்க இஸ்லாமிய அடிப்படை வாதிகள் உலகளாவிய ரீதியில் ஓரணியில் திரண்டதும் —

ஈரானின் அன்றைய ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமெய்னியால் மரண தண்டனை விதிக்கப்பட்டு எழுத்தாளர் கடந்த பல ஆண்டுகளாக பிரிட்டனில் தலைமறைவாக வாழ்ந்து வருவதும் உலகம் அறிந்ததே. அந்த பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மான் ருஷ்டி நஸ்றீனுக்கு தற்போது ஆதரவு தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் நஸ்றீனுக்கு ஆதரவு திரட்டும் முன்னணி எழுத்தாளர்கள் குழு ஒன்றுக்கு சல்மான் ருஷ்டி தலைமை வகிக்க இருப்பதாகவும் ஜெர்மன் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

### மன்னிப்புச்சபை குற்றச்சாட்டு

நஸ்றீனைக் கொலை செய்பவருக்கு சன்மானம் அளிக்கப்படும் என்று இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பகிரங்கமாக அறிவித்த பின்னரும் அவரை பாதுகாக்க பங்களாதேஷ் அரசு தவறியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால் நஸ்றீன் நீதிமன்றில் சரணடைந்தால் மட்டுமே அவருக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும என்று பங்களாதேஷ் அரசு அதற்கு பதில் கூறியுள்ளது.

தனது உயிரை பாதுகாக்குமாறு கோரி நஸ்றீன் சர்வதேச மன்னிப்புச் சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதே வேளை— நஸ்றீனின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் அல்லது அவர் பாதுகாப்பாக நாட்டில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் பங்களாதேஷ் அரசைக் கோரியுள்ளனர்.

நஸ்றீன் விரும்பினால் அவருக்கு தனது நாட்டில் தஞ்சம் அளிக்க ஜேர்மன அரசு முன்வந்துள்ளது ஜேர்மனிக்கு வருவதற்கான அனுமதியை எந்நேரமும் நஸ்றீனுக்கு வழங்குமாறு டாக்காவில் உள்ள தனது தூதரக அதிகாரிகளை ஜேர்மனி அரசு பணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நஸ்றீனைக் கைது செய்யுமாறும் தண்டிக்குமாறும் கேட்கும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கோரிக்கை உள்நாட்டில் வலுப் பெற்று வருவது பேகம் காலிதா ஷியா தலைமையிலான தேசியகட்சி அரசுக்கு தலையிடியை ஏற்படுத்தியுள்ளது

இந்நிலையில் இந்த விவகாரத்தில் வெளிநாட்டுத் தலையீட்டை விரும்பாத பங்களாதேஷ் அரசுக்கு ஜேர்மனியின் அறிவிப்பு கவலையைக் கொடுத்துள்ளது.

நஸ்றீன் இன்னமும் கைது செய்யப்படவில்லை அவரை கைது செய்வதற்கான கால எல்லையை ஆகஸ்ட் 4ஆம் திகதிவரை டாக்கா நீதிமன்றம் நீடித்துள்ளது

பிரதமரையும், பிரதான எதிர்க்கட்சியின் தலைவரையும் பெண்களாகக் கொண்ட பங்களாதேஷ் அரசு இந்தப் பெண் எழுத்தாளரின் பிரச்சினையை எதிர்காலத்தில் எவ்வாறு கையாளப்போகிறது என்று அனைவருமே எதிர்பார்க்கின்றனர். ஆனால் பெரும்பான்மை இஸ்லாமியர்களைப் பகைத்துக் கொள்ளும் எந்த முடிவும் அரசின் தற்கொலைக்கு சமமானது என்பது தெட்டத்தெளிவு.

### பெண் ''ருஷ்டி''

பலர் தமது கருத்துக்களை கவனமாகவே வெளிப்படுவார்கள், நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமான வார்த்தைகளில் கூறுவார்கள். ஆனால் நான் எனது கருத்தை நேரடியாகவே சொல்கிறேன் அடிப்படைவாதிகள் இன்று சுதந்திர கருத்துக்களை வெளியிடுவோரை நேரடியாகவே தாக்குகிறார்கள் எனவே அவர்களை நேரடியாகவே திருப்பித் தாக்க வேண்டும்: நான் எந்த மதத்துக்கும் எதிரானவள் அல்ல மதத்தின் பெயரால் நடக்கும் சந்திகளையே எதிர்க்கிறேன் இது துணிந்து நிற்க வேண்டிய நேரம் — இவ்வாறு கூறுகிறார் நஸ்றீன் ஆனால்...

இஸ்லாமிய அடிப்படை வாதப் புயலின் முன்னால் இந்தப் பூ இன்னும் எவ்வளவு காலம் நின்று பிடிக்கும் என்பது தெரியவில்லை. அல்லது ''பெண் ருஷ்டி'' என வர்ணிக்கப்படும் நஸ்றினுக்கும் சல்மான் ருஷ்டியைப் போலவே நீண்ட தலைமறைவு வாழ்க்கையே நிரந்தரமாகி விடக் கூடும்.

— நல்லூர் தாஸ் —

★


NORTHERN STENO - TYPING ACADEMY

வட மாநில சுருக்கெழுத்து தட்டெழுத்து கல்வியகம்

இல. 56, பிரவுன் வீதி, யாழ்நகர்.

ஆரம்பம் 01 - 08 - 1994

(32176)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். மத்திய கல்லூரி
# 175 ஆவது ஆண்டு நிறைவு விழா
31 - 07 - 1994

## எதிரியின்சன்னங்கள்மத்தியில் நிமிர்ந்து நிற்கும் கல்லூரி

தமிழீழத்தில் மிகப் பழமையான கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாகும்.



இறிஸ்தவக் கலை பண்பாடுகளும், சைவத் தமிழ்க் கலை பண்பாடுகளும் ஒன்றையொன்று சந்தித்துத் தழுவியதன் பேறாக கருக்கொண்டு உருப்பெற்ற விழுமியங்களை இன்றுவரை இக் கல்லூரி ஏற்றியும் போற்றியும் வருகிறது.

ஏகாதிபத்தியக் கோட்டைக்கு எதிரே கல்விக் கோட்டையாக நின்று எதிரிகளின் அழிவு ஆயுதங்களின் சன்னங்களை இதயத்திலே தாங்கிய போதும், உதயத்தின்

நா: க.
சண்முகநாத பிள்ளை
அதிபர்,

(1-8-1816இல்) பெற்ற உயிர்ப்பான மெய்ஞானத்தின் தோற்றமென்ன - இன்றும் கல்விப் பெருஞ் செல்வப் பேறாய் நிமிர்ந்து நிற்கின்றது.

175 ஆண்டுகளாக வாழையடி வாழையென வந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஒருமித்த தூய நன் நினைப்புகள் எம்மை இன்

(5ஆம் பக்கம் பார்க்க)

Message From:

## FIRST OLYMPIC PARTICIPANT

A School is like a forge. Our forge is 175 years old. 175 years of forging iron into steel. School and Universities are places where we forge the tools of learning. Later the world became our school grounds. Thousands of Languages, cultures and their creations are our heritage. Fear, anger, grief hate and love are human emotions that have no cultural boundaries. We use infinite forms of drama, art and music to express our inner thoughts and emotions. Such is the gift from generations before us. The highest form of education is that which prepares us to understand, accept and enjoy the rich cultures, including our own, left to us by those who went before us, We in turn add our contribution to society.

Learning to me is a never ending quest infinitely enjoyable and at times a painful pilgrimage.

Dr. N. ETHIRVEERASINGHAM,

Vice - Patron,
OBA/JCC Jaffna.

## எம்மண்ணுக்கும் மக்களுக்கும் உழைக்கும் மத்தியின்மணிகள்

யாழ்ப்பாண மாநகரத்தில் முதன் முதலாக 1816 இல் ஆரம்பிக்கப்பட்ட எமது யாழ். மத்தியகல்லூரி தன்னுடைய 175 வருடங்களையும் கடந்து வந்த சரித்திரத்தில் பல பெரியார்களையும், பேராசான்களையும், வைத்திய நிபுணர்களையும், வைத்திய கலாநிதிகளையும், ஆசான்களையும், பொறியிலாளர்களையும், கலைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும், வியாபார நிபுணர்களையும், இந்த மண்ணிற்கும், மக்களுக்கும், உலகிற்கும் உருவாக்கித் தந்திருக்கின்ற நிலையில் —

டாக்டர் எஸ். பி. ஆர்.
சீர்மாறன்
தலைவர் பழைய மாணவர் சங்கம்
யாழ் மத்திய கல்லூரி

யாழ். மத்தியின் பலபழைய மணிகள், மத்தியின் நண்பர்கள், நலன்விரும்பிகள் இந்த அன்னைக்கு கோலாகலமாக விழா எடுப்பதில் பல்வேறு விதத்தில் உதவியமை மன மகிழ்ச்சியைத் தருகின்றது.

மேலும் 1834 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையும், 1881 இல் அதிபர் வண. பிரட்றிக் வெப்ஸரர் என்பவரால் முதன் முதலில் யாழ்ப்பாணத்திற்கு தடுப்பாட்ட விளையாட்டையும் (Cricket), 1894 இல்



அதிபர் வேப்ஸர் லீஸ் உதைபந்தாட்டடையும் (Football) அறிமுகம் செய்த பெருமை யாழ். மத்திய கல்லூரிக்கு உண்டு.

1906-12-28 இல் பழைய மாணவர் சங்கம் ஆரம்ப

(5 ஆம் பக்கம் பார்க்க)

## விழாவுக்கு பக்கபலம் அதிபர்– தலைவர்கள்

யாழ். மத்திய கல்லூரி 1816 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட முதல் பாடசாலை என்பதில் எவ்வித ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. கல்லூரி தனது 175 ஆவது ஆண்டு நிறைவை 1991 ஆம் ஆண்டு கடந்து வந்த போதிலும் காலத்தின் சிறந்தால் 1994 ஆம் ஆண்டு ஜூலை 31, ஆகஸ்ட் 1ஆம் திகதிகளில் மிகவும் கோலாகலமாக கொண்டாடுகிறது.

மத்திய கல்லூரி உருவாக்கிய பலதரப்பட்ட மணிகள் எத்தனை எத்தனை. இவர்களுள் இவ்விழாவுக்கு வித்திட்டவர், முன்னாள் தலைவர் பொறியியலாளர் சு. இராமகிருஷ்ணன் அவர்கள், கடந்த சில காலங்களில் எமது பழைய மாணவர் சங்கத்தை உயிரூட்டி, மெருகூட்டி வளர்த்தவரும் இவரே. அவ்வழியிலே தற்போதைய தலைவர் வைத்திய கலாநிதி டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன் அவர்களும் செயற்பட்டு வருகிறார்.

175 ஆம் ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாகக் கொண்டாட சகலரினதும் மனத்தையும் கவர்ந்தெடுத்து, சிரமேற் கொண்டு அல்லும் பகலும் இவர் அயராது உழைத்து வருகிறார். இருக்கு பழைய மாணவர்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். கல்லூரி அதிபரின் ஊக்கம் இவ்விழாவுக்கு பக்கபலமாக இருந்து வருவது ஒரு வரப்பிரசாதமே.

என். இராஜதேவன்,
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

## கல்வி வளர்ச்சியிலே தனி இடம்

1816ஆம் ஆண்டில் வெஸ்லியன் மிஷனினால் ஆரம்பிக்கப்பட்ட யாழ். மத்திய கல்லூரி இன்று 175 ஆண்டுகளைக் கடந்து வெற்றிநடை போடுகின்றது. அதற்குரிய விழாவை இன்று நாம் மிக மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் கொண்டாடுகின்றோம்.

யாழ்ப்பாண மக்களின் கல்வி வளர்ச்சியில் யாழ். மத்திய கல்லூரிக்கு ஒரு தனித்துவமான இடம் உண்டு. விளையாட்டு, வெளி நடவடிக்கை உட்பட்ட பூரணமான கல்வியை அளிப்பதில் எமது கல்லூரி முக்கிய கவனம் செலுத்தி வந்துள்ளது. இதனை மத்தியத்தின் மைந்தர்கள் நாடு முழுவதிலும் பிற நாடுகளிலும் பிரத்தியேக குணாம்சங்களுடன் பல்வேறு துறைகளிலும் நற்பணியாற்றி வருவதைக் காணலாம்;

கடந்த 175 ஆண்டு கால வளர்ச்சியில் ''யாழ் மத்திய



கல்லூரி பாரம்பரியம்'' என்று அழைக்கக் கூடிய பண்பு ஒன்று உருவாகி வளர்ந்து இருக்கிறது. வெறும் ஏட்டுக் கல்வியில் மட்டும் நாட்டம் கொள்ளாத நற்பண்பு அது.

கல்லூரியின் நீண்டகால வரலாற்றில் அது எண்ணற்ற சவால்களைச் சந்தித்த போதும் அவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் சமாளித்து முன்னேறியுள்ளது. அதன் பணியைத் தொடர்ந்தும் திறம்பட நிறைவேற்றும் என்ற திடமான நம்பிக்கையுடன் இறைவன் துணை நிற்கப் பிரார்த்திக்கின்றேன்.

எமக்கு அறிவையும், பண்புகளையும் புகட்டிய எமது யாழ். மத்திய கலைச்சுடரைப் போற்றுகின்றோம். சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

சு. இராமகிருஷ்ணன்
முன்னாள் தலைவர்,
யாழ். மத்திய கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,

## மணிக் கொடி என்றும் நிலைக்க வேண்டும்

யாழ். குடாநாட்டின் ஒவ்வொரு மனிதனாலும் போற்றப்படுவது அறிவாற்றலும், கல்வியுமாகும். நாம் போற்றும் கல்வியை எமக்குப் புகட்டிய கல்லூரிகளில் யாழ். மத்திய கல்லூரி ஓர் உன்னதமான முதன்மை இடத்தை வகிக்கின்றது.

மத்திய கல்லூரி அதன் சரித்திர பூர்வமான நீண்டவெளியில் எண்ணற்ற அறிவாளிகளையும், விஞ்ஞானிகளையும், தொழில் விற்பன்னர்களையும், விளையாட்டு வீரர்களையும் எமக்கு அளித்திருக்கின்றது. இங்கு விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஓர் அம்சம் யாதெனில் இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் சிறந்த கல்வியைப் பெற்றதுடன் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகளும் பண்புகளும் புகட்டப்பட்டதால் இன்று உலகத்தின் பல பாகங்களிலும் பலராலும் மெச்சக் கூடிய வகையில் சிறந்த மனிதர்களாக விளங்குகின்றார்கள்.

யாழ். மத்திய மணிக்கொடி என்றும் நிலைக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வே. நவரத்தினராசா,
குடிசார் பொறியியற் போராசிரியர்,
யாழ். பல்கலைக் கழகம்.

## கல்லூரியை மறவாத நற்பண்பு

யாழ். மத்திய கல்லூரி 175ஆவது ஆண்டு விழா அழைப்பிதழ் கிடைத்து மிகவும் மகிழ்வுறுகிறோம்.

இதனை பழைய மாணவர்கள் ஒருங்கிணைந்து ஆற்றுவது அவர்களின் ஒற்றுமை, ஒத்துழைப்பு, கல்வி கற்ற காலத்தை மறவாத நன்றிக்கடன் ஆகிய பண்புகளை எடுத்துக்காட்டுகிறது.

இதன் புராதன வரலாறு பெரும்புகழ் உடையது. இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பலர் உயர் உத்தியோகங்கள் வகித்து இன்னும் இக்கல்லூரிக்குப் பெருமையும் புகழையும் ஈட்டி வருவதை யாம் அறிவோம். இது வெறும் புகழ்ச்சியல்ல.

இன்னல்களும் இடர்களும் நிறைந்த இக்கால கட்டத்தில் தளர்வுறாத மன உறுதியோடு மாணவர்கள் செயலாற்றுவது பாராட்டுக்குரியது.

இவ் விழா செவ்வனே, நனிதே நிறைவுற ஆண்டவனின் திருவருளை உமாரவேண்டி எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்கி மகிழ்வெய்துகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
பரமாசாரிய
ஸ்வாமிகள்

## தளர்ந்து போகாத மன உறுதி

யாழ். மத்திய கல்லூரி தனது தோற்றப்பாட்டை உறுதி செய்து கொண்டு நூற்று எழுபத்தைந்து ஆண்டுகள் கல்விப் பணியாற்றி, இரண்டாம் நூற்றாண்டை நோக்கி வீறு நடை போடும் இவ்வேளையில் இதன் கல்விப் பணியை வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எத்தனையோ அரக்கத்தனமான இடர்கள், இடிபாடுகளின் மத்தியிலும் தனது கல்விப் பணியைத் தளராத உள்ளத்தோடு மத்திய கல்லூரி ஆற்றி வருகின்றது மத்திய கல்லூரியின் கட்டடங்கள் பல இடிபட்ட போதிலும், மாணவர்களின் கல்வித் தளைமையும் மனோதிடமும் இடிபட்டுவிடாது. அவற்றைக் கட்டியெழுப்புவதில் இக்கல்லூரி ஆற்றிவரும் சிறப்புப்பணியைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்த இக்கட்டான காலகட்டத்திலும், கல்லூரியை அண்மித்து ஷெல் வந்து விழுகின்ற போதிலும், சொல்லுறுதிதவறாத கடமையுணர்வோடு பணியாற்றிவரும் அதிபர் ஆசிரியர்களையும், பற்றுறுதியோடு இக்கல்லூரியின் வளர்ச்சியிலும், முதிர்ச்சியிலும் மனநிறைவும் மகிழ்வும் அடைகின்ற பழைய மாணவர்களையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

யாழ் ஆயர்
வண. தோமஸ்
சவுந்தரநாயகம்
ஆண்டகை அவர்கள்

## மத்தியின் மணிகளின் கடமை

பார்ப்பதற்கு கண்கள் அவசியம் போன்று நல்ல வாழ்வுக்கு சிறந்த கல்வி அவசியம். கல்வி கற்பதற்கும் அறிவைத் தேடுவதற்கும் காலங்களோ எல்லைகளோ நிர்ணயம் செய்ய முடியாது;

மேலும் கல்வியும் அறிவும் எந்தவொரு சமுகத்தினதும் இரண்டு கண்கள் போன்றவை. கண்களை நாம் எவ்வளவு அக்கறையோடு பாதுகாக்கின்றோமோ அவ்வளவுக்கு எமது கல்விச் செல்வத்தையும் அறிவு வளங்களையும் பேணிப் பாதுகாப்பதோடு அவற்றை காலத்திற்கேற்ப — தேவைக்கேற்ப புடம் போட்டு புதுப்பொலிவு பெறச் செய்ய வேண்டும்.

இந்தவகையில் பழைய மாணவர்கள் என்கின்ற முறையில் நாம் பயின்ற கல்விக் கூடத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் குறிப்பாக இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் [illegible] இல் எந்த உயரத்தில் இருந்தாலும் செய்ய வேண்டியது தலையாய கடமையாகும். மத்தியின் மணிகள் நிச்சயம் அதனைச் செய்வார்கள் என்கின்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு.

டாக்டர்.
எஸ். குகதாசன்
உபகாப்பாளர்
கண்சிகிச்சை நிபுணர்
யாழ் போதனா
வைத்தியசாலை—
யாழ்ப்பாணம்


யாழ். மத்திய கல்லூரியின்
175ஆவது ஆண்டு நிறைவையொட்டி
வாழ்த்துவோர்

லெய்டன் புடைவை நிலையம்
LEYDEN TEXTILES CENTRE
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

லாவண்யா, வி. ரி. அன்ட் சன்ஸ்
LAVONYA V. T. AND SONS
JAFFNA. CHUNNAKAM.
யாழ்ப்பாணம். சுன்னாகம்.

லிங்கம் (லிங்கம்ஸ் கூல் பார்)
வெலிங்டன் சந்தி,
LINGHAM'S JAFFNA.
யாழ்ப்பாணம்.

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ
13, 14 பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ சுபமாலா மோட்டர்ஸ்
NEW SUBAMALA MOTORS
அர்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

டவர் கூல் பார்
TOWER COOL BAR
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம். JAFFNA.

லிங்கம் பட்டு அகம்
LINGHAM'S SILK HOUSE
21, மேல்மாடி நவீன சந்தை,
18, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். JAFFNA

யாழ் மத்திய கல்லூரியின்
175ஆவது ஆண்டு நிறைவையொட்டி
வாழ்த்துவோர்

சிற்றி மெடிக்கல்ஸ்
(CITY MEDICALS)
HOSPITAL ROAD. JAFFNA.
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

கலாலயா
KALALAYA
(தொழிற்பயிற்சியகம்)
விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

எஸ். வி. முருகேசு
எஸ். வீ. எம். நிறுவனம்
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

அல்டி ALDI
269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
ST. PETER'S LANE. JAFFNA.

ராஜூ ஸ்டோர்ஸ்
RAJU STORES
67 - 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வைகை ஆடை அகம்
62, நவீன சந்தை, (உட்புறம்)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சரசாலை கனகன்புளியடிச் சந்திக்கருகாமையில், சாவகச்சேரி றோட்டில் 12 பரப்புக் கொண்ட மா, தென்னை உள்ள வீடும் வளவும் விற்பனைக்குண்டு. விரைவில் தொடர்புகொள்ளவும். முகவரி: திருமதி சம்புலிங்கம், மே/பா இராமச்சந்திரன், இளைப்பாறிய ஆசிரியர். சரசாலை. (32082)

இரண்டு வாரம் நிரம்பிய சிக்கி, போலிஸ், பிராமா, சில்வசீப், பிறைட் கினி கோழி குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஜோதி அம்மா, விக்னேஸ்வர வித்தியாலயம் முன் வீதி, மீசாலை. (7565)

Russian white வான் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32150)

## விற்பனையாகின்றது

G. A. Q., G C E (A/L) பரீட்சைகளுக்கான தமிழ்ப் பாட வழி காட்டி II (இலக்கண விடைக் குறிப்புகள்) எங்கும் கிடைக்கும். விலை ரூபா 16/- (32169)

## பேட்டு குஞ்சு விற்பனை

சறுப்பு பேட்டு குஞ்சுகள், பிறவுன் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32154)

## நாய்க்குட்டிகள் விற்பனை

அழகிய பொமரேனியன் ஆண், பெண் நாய்க் குட்டிகள் ஒரு மாத வயதுடையவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 9, மூன்றாம் குறுக்குத் தெரு, (அடைக்கல மாதா கோயில் பக்கமாக), யாழ்ப்பாணம். (32141)

நல்ல இன அழகிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வி எம். சரஸ்ஜா. இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை). பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8805)

## இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து கொடுக்கப்படும். (வெலிங்டன் சந்தி. அறிவகம் அருகில்) 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (31838)

## கோழிக்குஞ்சு விற்பனை

Prima, Christombu, Broiler குஞ்சுகள், Golden Comet பேட்டுக் குஞ்சுகள், Hylan வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து 4-8-94 வியாழக்கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32149)

## தேவை

பிளவுஸ், ஸ்கேட், Fபுறக், பஞ்சாபி ஜீன்ஸ் முதலிய பெண்களுக்குரிய உடுப்புகள், வெட்டி தைக்கக்கூடிய அனுபவமுள்ள பெண்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். இல 942, மே/பா உதயன். (7554)

G. C C. வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையத்திற்கு அனுபவமுள்ள தாதிமார், மருந்துக்கலவையாளர் (பெண் பிள்ளைகள்) தேவை. தகுதியுள்ளவர்கள் 31 7-1994 பிற்பகல் 2 00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் சந்திக்கவும் G C C வைத்திய நிபுணர் சேவைநிலையம், இல 514/14 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (32157

## O/L MATHS

Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 9, 10 உட்பட) ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். 15 வருடங்கள் கிடைத்தால் திருத்திய அனுபவமுள்ள ஆசிரியர்: B Sc இல 85, சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (32153)

Distinction பெறுபேறடைவதற்கு 40 மணித்தியாலங்களில் சகல Section களும் Portionகளும் நிறைவேற்றப்பட்டு Section and Portion Revision உடன் Past - Papers Practice உம் அளிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லேடேவிற் திரா வீதி, கனடிக்குளி (7561)

## பராமரிப்பாளர் தேவை

செல்வச்சந்நிதி அடியார் மடத்துக்குப் பராமரிப்பாளர் தேவை; ஐம்பது வயதுக்கு மேற்பட்ட கணவன், மனைவியோ, தனியாளோ காலை 9-00 மணியின் மேல் நேரில் வரவும்; ம. வெங்கடாசலபிள்ளை, நிர்வாகி, அடியார் மடம், செல்வச்சந்நிதி, தொண்டமனாறு. (32140)

## மணமக்கள் தேவை

இந்து. செவ்வாய்க் குற்றமற்ற. 34 வயது M. B. B S; இற்கும் 41 வயது T Aக்கும், 39 வயது ஆசிரியருக்கும், 35 வயதுப் பட்டதாரிப் பெண்ணுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (32165)

## ஆண்டு 4 வகுப்புகள்

ஆண்டு 4இற்கான சனி, ஞாயிறு வகுப்புகள் (week and Classes) 06-08-94 சனி முற்பகல் 8.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. ஒவ்வொரு சனி, ஞாயிறும் 8-00 – 11-00 வகுப்புகள் நடைபெறும்; தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32128)

## மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, வீடு, கை பார்த்தல், குறிப்பு எழுதுதல் மற்றும் சகல ஜோதிட ஆலோசனைகளுக்கும் ஜோதிடரைத் தினசரி 140, செட்டியார் வீதி, கல்வியங்காட்டுச் சந்தை அருகில் சந்திக்கலாம். (32167)

## புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும் (7445)

## பயிற்சி வினாத்தாள்கள்

3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புகளிற்கான அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம். (7560)

## ஜோதிட விஞ்ஞானம்

தனு ராசியில் யுரேனஸ் நெப்டியூனுடன், துலாராசியில் வியாழராகுவும் ஒரே பாகையில் சஞ்சரிப்பதாலும், சனி பார்வையாலும், ஆட்சிமுதல் தேர்தல் குழப்பங்களும் வன்முறைகளும், அரசியல் கொலைகளும், U·N·P· தோல்வி நிச்சயமானதால் உண்டாகும். சதீபா, ட்டுடை. (7284)

## புலமைப் பரிசில் 94

Bond கல்வி நிறுவனத்தால் 31-7-94, 02-8-94, 04-8 94, திகதிகளில் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம்-தமிழ்) விடைகளுடன் 10/- மட்டும் எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்; (7559)

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை இல: 303241415 V, இம்மாதம் ஒய்வூதியம் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதியிற் பெறச் சென்ற போது தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும், மு. தம்பிராசா, பாரதி பதி கோண்டாவில் மேற்கு கோண்டாவில். (7566)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

கணிதவியலிலும், பௌதிகவியலிலும் உதவி விரிவுரையாளர் பதவிக்கான 1994 ஜூன் 2ஆம் திகதிய விளம்பரத்திற்கு மேலதிகமாக, இப்பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1994 ஆகஸ்ட் 31ஆம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-07-27.

(சி 8808)

## முதலாவது பிறந்த தின ஆயுஸ்ய ஹோம அழைப்பு

### செல்வன் சு. வரோதயன்

எமது தலைமகன் செல்வன் சு. வரோதயனின் முதலாவது பிறந்ததின ஆயுஸ்ய ஹோம விழா நாளை மறுதினம் (02-08 94) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும்.

அவ்வமயம் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் சமுகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கவனிக்க! தனிப்பட்ட அழைப்பு விடுக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

திரு செ. சுதாகரன்,
திருமதி சு. சிவாஜினி.

முத்துமாரி கோயில் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

[32155]

## தென்னிந்திய திருச்சபையின் தொழிற் பயிற்சி வகுப்புக்கள்

புதிய 6மாத கால தொழிற் பயிற்சி வகுப்புகள் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாக உள்ளன.

1. தையல்
2. தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து
3. ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து
4. விசேட ஆங்கில வகுப்பு

ஆகிய பாடநெறிகளில் 6 மாதங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு தகுதிகாண் பரீட்சை நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

● விண்ணப்பப்படிவங்களை,

தென்னிந்திய திருச்சபை,
யாழ். பேராயம்,
நகர்ப்பணி,
41, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்


என்னும் விலாசத்தில் அனுமதிக்கட்டணமாக 60/- செலுத்தி, கிழமை நாட்களில் காலை 8-30 — 3-30 மணி வரையில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30 — 08 — 1994

முகாமையாளர்,
தொழிற் பயிற்சி நிலையம்,

[சி-8651]

## மூன்றாமாண்டின் நினைவலைகள்



### அமரர் வீ. எம். கணபதிப்பிள்ளை

தளிராய்: 13 04-1913 — சருகாய்: 31 07-1991

காற்றே நீ சென்று
காதோடு சொல்லிவிடு
தேற்றுவார் யாருமின்றி
தேம்பியழு நாம்கலங்கி
துவண்டுவிட்ட போதினிலும்-எம்
நெஞ்சில் நிலைத்து விட்ட
நினைவுகளே எங்களைத்
துணிவோடு என்றும்
நிமிர்ந்து நின்று வழி நடத்தும்

- V. M. K. குடும்பத்தினர்

கண்டி வீதி,
சாவகச்சேரி.

(7563)

## பிறந்ததின வாழ்த்து

(31 - 07 - 1994)

செல்வன் தசானுசன் (முதலாவது)
செல்வன் தசாகன் (நான்காவது)

கச்சேரி நல்லூர்வீதி, திரு., திருமதி
கணபதி-அருள்செல்வி

தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள் தசானுசன்-தசாகன் தமது பிறந்ததினத்தை இன்று (31-07-94) ஞாயிற்றுக்கிழமை மாலை 2-30மணியளவில் தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை அப்பா, அம்மா, பெரியப்பா (திருமலை) பெரியம்மா, பெரியண்ணா, சின்னண்ணா, மாமா, கொழும்பத்தை, கொழும்பத்தான், மச்சான்மார், கொக்குவில் ஐயா, அம்மம்மா, மாமா, சத்தியன்ரா, மற்றும் உறவினர்கள், நண்பர்கள் பகவான் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

107/3, கச்சேரி நல்லூர்றோட்,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(32156)

## நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயம் அம்பாள் மஹோற்சவ விஞ்ஞாபனம்

31 — 07 — 1994 கொடியேற்றம் ந.ப. 12-00 மணி
05 — 08 — 1994 கைலாசவாகனம் இரவு 8-00 மணி
07 — 08 — 1994 மோட்சபிரசார்த்த சங்காபிஷேகம் காலை 10-00 மணி (ஆடி அமாவாசைத் தினம்)
07 — 08 — 1994 சப்பறம் இரவு 8-00 மணி
08 — 08 — 1994 தேர் காலை 8-00 மணி
09 — 08 — 1994 தீர்த்தம் காலை 9-00 மணி
10 — 08 — 1994 பூங்காவனம் இரவு 8-00 மணி

இவ்வுற்சவகாலத்தில் தினமும் இரவு 7-00 மணி முதல் 8-00 மணி வரை விசேட தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

### இராமாயணம்

நிகழ்த்துபவர்: கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் (கம்பன் கழக அமைப்பாளர்)

- ஆலய பரிபாலன சபை;

[32168]

## கோண்டாவில் கிழக்கு நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த லச்ஷார்ச்சனை விஞ்ஞாபனம்

31—07—1994 தொடக்கம் 09—08—1994 வரை பிற்பகல் 3 தொடக்கம் இரவு 8மணி

விசேட நிகழ்ச்சிகள் 10 தினங்களும்

அபிஷேகம், லச்ஷார்ச்சனை அர்ச்சனை, அம்பாள் உலாவருதல்

வி. கே. கானமூர்த்தி புதல்வர் குழுவின் நாதஸ்வரக் கச்சேரி

தெய்வீகப் பேருரை: தினமும் இரவு 7 — இரவு 8 வரை

நிகழ்த்துபவர்:
கம்ப கலாசுரபி த. சிவகுமாரன் (அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர் யாழ் இந்துக்கல்லூரி)

அனைவரும் வருகை தந்து அம்பாளின் அருள் பெறுக!

ஸ்ரீநாகபூஷணி அம்பாள்
ஆலய பரிபாலன சபை.

[32170]

## ஓராண்டு நினைவஞ்சலி

31 — 07 — 1994

பிறப்பு: 25 — 05 — 1960



இறப்பு: 31 — 07 — 1993

### அமரர் அரியநாயகம் லிங்கநாயகம்

(லிங்கன்)

பிள்ளை இல்லையென்று ஏங்கிய எங்களை பாசத்துடனே இன்பக்கடலில் மூழ்க வைத்த செல்வமே! திருப்பதியான் அழைத்திடவே எங்களை எப்படி மறந்தனையோ நித்தம் நித்தம் எங்கள் உள்ளங்களில் வீற்றிருக்கும் வாடா மலருக்கு கண்ணீரால் நீர் பாய்ச்சுகிறோம். உங்கள் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டி ஏங்கிய உள்ளங்களுடன் ஆறாத்துயரில் இருக்கும் பாசமிகு!

- குடும்பத்தினர்.

198, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[7564]

## பெயர்மாற்றம்

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல் என்னும் பெயரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்

### ச. சி. ஞானம் ஆடையகம்

எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்;

○ கூறைச்சேலைகள் ○ காஞ்சிபுரம் ○ பட்டுவேட்டிகள்
○ சேட்டிங் ○ சூட்டிங் ○ கோயில் பட்டுக்கூடைகள்
மற்றும் பல புடைவை தினுசுகளையும்

உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய சிறந்த ஸ்தாபனம்

ச; சி. ஞானம் ஆடையகம்
S. S. GNANAM TEXTILES
54, [illegible] யாழ்ப்பாணம்.

(32161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## ஈர்முனை அம்பு

வடபகுதி மாணவர்களின் கல்வி நிலை தொடர்பாக கடந்த வாரம் வெளியான இரு செய்திகள் அதிர்ச்சி தருவனவாக இருக்கின்றன.

★ யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இடையே அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின்போது 69 சதவீதமான மாணவர்கள் ஏதாவது ஒரு போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

★ கோப்பாய் கல்வி வட்டத்தில் மட்டும் ஆண்டு 10 வரையுள்ள வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களில் இரண்டாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாத நிலையில் இருப்பதாக இனம் காணப்பட்டிருக்கிறது.

இவை இரண்டுமே அதிர்ச்சி தரும் தகவல்களாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முழுதாகச் செய்யப்பட்ட ஆய்வுகள் அல்ல இவை. மாவட்டத்தின் மாணவர்கள் நிலையைத் தெரிவிக்கும் மாதிரிக் கணிப்பீடுகளின் பெறுபேறுகளே தரப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் மத்திய நகர்ப் பகுதி, யாழ் மாநகராட்சிமன்றப் பிரதேசமாகும். அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியிலேயே செய்யப்பட்ட ஆய்விலேயே 69 வீதமான மாணவர்கள் — மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் — போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப் பட்டிருப்பின், புறநகர்ப் பாடசாலை மாணவர்களின் நிலைமையைக் கூறத் தேவையில்லை.

இதுபோல கோப்பாய் கல்வி கோட்டத்தில் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிலேயே — அதுவும் ஆண்டு 10 வரை பயிலும் மாணவர்களிலேயே — 2 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு எழுத வாசிக்கத் தெரியாது எனின், ஏனைய பின்தங்கிய, கஷ்டப்பிரதேசங்களில் மதிப்பீடு நடத்தினால் மேலும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் உள்ளது தெரியவரும்.

ஈழத் தமிழரின் முதல் சொத்து — நிலையான சொத்து — கல்விதான்.

அத்தோடு ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லும் சக்தி இளைஞர் சக்திதான்.

கல்வித்துறை வளரவும், இளைஞர் சக்தி பெருகவும் நிலைக்களனாக இருப்பது மாணவர் சமுதாயமே.

மாணவர் சமுதாயத்தின் கல்வித்துறை வீழ்ச்சியும், போசாக்கு குறைபாட்டால் ஏற்படக்கூடிய நலிவு நிலையும் ஈழத் தமிழர் சமுதாயத்தை ஈர்முனை அம்பாகக் குத்திக் காயப்படுத்திவிடும்.

ஸ்ரீலங்கா அரசின் கல்விக் கொள்கைகளால் — மாவட்ட அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போன்ற நடவடிக்கைகளால் — ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழரின் கல்வித்துறையும் —

பொருளாதாரத் தடை போன்றவற்றினால் பாதிக்கப் பட்டிருக்கும் மக்களின் ஆரோக்கிய நிலையும் —

மேலும் பாதிப்படையப் போவதையே மேற்படி இரு ஆய்வுகளின் பெறுபேறுகளும் எமக்கு உணர்த்துகின்றன.

கல்வித்துறைப் பாதிப்பு, உடல் நலம் பாதிப்பு ஆகிய இரண்டிலிருந்தும் எமது மாணவர் சமுதாயத்தை — இளம் தலைமுறையை — காப்பாற்றுவதன் மூலம் எமது சமுதாய அழிவைத் தடுத்து நிறுத்த அவசரமான — அவசியமான — வேலைத் திட்டங்களை செயற்படுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

வருங்காலத் தமிழர் சமுதாயத்துக்கு ஏற்படவிருக்கும் பேராபத்தை உணர்ந்து அதனைத் தடுக்க வேண்டிய சமுதாயப் பொறுப்பை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து செயற்பட வேண்டிய வேளை இது. பொறுப்பானவர்கள் இப்போது தலையை மண்ணிற்குள் புதைத்துக்கொண்டிருந்தால் விளைவு பேரழிவாக முடியும். எல்லோரும் ஒன்றிணைந்து [அழிவுக்கு எதிராகக் களத்தில் குதிக்க வேண்டும்]

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது சிங்களக் கட்சிகளின் கவர்ச்சி வாசகமே!

இன்னும் இரண்டு வாரங்களில், பதினைந்து நாள்களில், இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்துக்குப் பொதுத் தேர்தல் நடக்கப் போகிறது.

முன்னர் எப்போதும் இல்லாத விதத்தில் இம்முறை தெற்கில் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. அதனை விடவும் தேர்தல் களத்தில் எந்த வேளையிலும், எந்த நிமிடத்திலும் தீப்பிடிக்கலாம் என்று கூறுமளவுக்கு அங்கு வன்செயல் பொறி கிளம்பிக் கொண்டிருக்கிறது.

இரு அணிகளைச் சேர்ந்த தலைவர்களும் மேடையில் எதிரிகளாகக் காட்சி அளித்தாலும், சந்திக்கும்போது நண்பர்களாக நடித்துக் கொள்ளும் "நாகரிகம்" உள்ளவர்கள். ஆனால் அவர்களின் ஆதரவாளர்களும், இடைத்தர நிலையில் நின்று பணிபுரிபவர்களும் முட்டி மோதிக் கொள்கிறார்கள். அதனாலேயே இருபது நாட்களில் 600க்கும் மேற்பட்ட தேர்தல் வன்செயல்கள் பெருகியுள்ளன.

இரு தரப்பினருமே தேர்தல் சட்டங்களை மதிக்காது, அவற்றை மீறிப் பிரசார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இப்போது தாம் அரசாங்கம் ஒன்றின் அங்கத்தவர் இல்லை ஆதலால் சட்டத்தை மீறலாம் என்ற எண்ணங் கொண்டவர்களாக இருசாராரும் வாக்கு வேட்டையை

**அரசியல்**

மட்டுமே முன்நிறுத்திச் செயற்படுகிறார்கள்.

எப்படியோ, வன்செயல்களின் மத்தியிலும் ஓகஸ்ட் 16ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்ற நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் உண்டாகாது என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் பதவி ஏற்றபின்னர் நாட்டின் அரசியல் சூழ்நிலை எவ்வாறு அமையும் என்பதை இப்போது நிச்சயமாகக் கூறிவிட முடியாது. ஆயினும் அது எவ்வாறு இருக்கும் என்பதை ஊகிப்பதில் சிங்கள மக்களை விடத் தமிழர்களே அதிக அக்கறை காட்டுபவர்களாக இருக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி வென்றாலும் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான நியாயமான தீர்வு எய்தப்படமாட்டாது என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்லலாம். தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை எந்தச் சிங்களக் கட்சியும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொண்டாலும் அவற்றை ஏற்று அங்கீகரிக்கத் தயாரில்லை. இதுவே அரசியல் அடித்தளத்தின் தன்மை!

தங்களைத் தேசியக் கட்சிகள் என்றும், நாட்டின் சகல இன மக்களின் நலன்களிலும் தமக்கு அக்கறை உண்டென்றும் கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்காவின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இதுவிடயத்தில் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பது சொல்லாமலே தெரிந்த ஒன்றே.

## தெற்கில் அரசியல் தளநிலைமை பண்டாவின் காலத்தை நோக்கி!!

### பின்னுக்குத் தள்ளி விட்டன

பொதுத் தேர்தல் நடைபெறப் போகிறது என்ற தகவல் வந்ததுமே இம்முறை தேர்தல் களத்தில், இனப்பிரச்சினை, பொருளாதாரம் (Ethinic & Economic) ஆகிய இரண்டு விடயங்களே முதன்மைப்படுத்தப்படும் என்று அரசியல் அவதானிகள் கருதினர். அவை இரண்டு அம்சங்களிலும் யார் கூடுதல் புள்ளிகளைப் பெறுவது என்ற போட்டியே இரண்டு பிரதான கட்சிகளிடமும் இருக்கும் என்றும் நம்பப்பட்டது.

ஆனால் அவை இரண்டினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் உத்தியோகபூர்வமாக வெளிவந்த நிலையில் நோக்கும்போது, இனப்பிரச்சினை விவகாரத்தை இரு தரப்பாருமாகச் சேர்ந்து முக்கியத்துவம் இல்லாத ஒரு விவகாரமாக்கி விட்டனர். புத்திசாதுரியமாகப் பின்னுக்குத் தள்ளி விட்டனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கப்படும் என்றும் அது பயன்தராத கட்டத்தில் இராணுவத் தீர்வை மேற்கொள்ளப்போவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்திருக்கிறது. வடக்கு - கிழக்கு இணைப்புக் கருத்துக் கணிப்பு நடத்தியே முடிவு செய்யப்படும் என்ற தனது பழைய நிலைப்பாட்டையே மீண்டும் வலியுறுத்தி இருக்கிறது.

இதற்கும் சற்று அப்பால் சென்று, இப்போதுள்ளதைவிட தமிழருக்கு வேறு எந்தவித தன்னாட்சி அதிகாரமும் வழங்கப்படமாட்டாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

அந்த வகையில் இனப்பிரச்சினை என்ற முக்கியமான கொதிக்கும் பிரச்சினை சம்பந்தமாக, தனது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்று ஐக்கிய தேசியக்கட்சி தெளிவாக்கி விட்டது. சிங்களப் பேரினவாதிகளின் ஆதரவும் அன்பும் தேவையானவை, உதாசீனம் செய்யப்பட முடியாதவை என்று கருதுவது ஐக்கிய தேசியக்கட்சி. ஆகையால் இந்த நிலைப்பாட்டைத்தான் அது கைக்கொள்ளும் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்றே!

ஸ்ரீ. ல. சு. கட்சி (பொதுமக்கள் ஐக்கிய முன்னணி) இனப்பிரச்சினை விடயத்தில் சற்றுப் புதுவழியில் நடக்கும் என்று தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்களில் ஒரு சாராரும் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்பு வெறும் கானல் நீர் என்பதனைச் சுதந்திரக் கட்சி காட்டிவிட்டது.

இனப்பிரச்சினைக்குரிய தமது தீர்வு என்ன என்பதையோ, அதனை எவ்வாறு கையாளப் போகிறது என்றோ தெளிவாகத் திட்டவட்டமாகத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொ. ம. முன்னணி தெரிவிக்கவில்லை. வெறும் மேலோட்டமாகவே, பிடிபடாத முறையிலேயே இனப்பிரச்சினை சம்பந்தமாக அதில் சொல்லாடப்பட்டுள்ளது.

"புவியியல், பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு புதிய நிர்வாகப் பிரிவுகளை ஏற்படுத்துவது" — என்பதே பொ. ம. முன்னணியின் அறிவிப்பு: அந்தப் புதிய அரசியல் நிர்வாகப் பிரிவு எவ்வாறு அமையும் என்ற விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

### அறிஞர்களின் அச்சம்

தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலேனும் தமது புதிய திட்டம் என்ன என்பதை சந்திரிகா கூடத் தெரிவிக்கவில்லை. "நாட்டைப் பிரிக்க அனுமதிக்க மாட்டோம்" என்றும், "யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம்" என்றும் வெறும் கொட்டையாகக் கூறிவருகிறார்.

இப்போது சுதந்திரக் கட்சியில் இணைந்திருக்கும் கல்விமான்களில் பலர் ஐ. தே. கட்சி அரசு இனப்பிரச்சினையைக் கையாளும் விதத்தைக் கண்டித்து எழுதிய போதெல்லாம், சமஷ்டி அரசமைப்பின் மூலமே நாடு பிளவுபடாமல் தடுக்க முடியும் என்று பகிரங்கமாக ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் கட்டுரை எழுதியிருந்தார்கள். கருத்தரங்குகளில் பேசியுமிருந்தார்கள்.

ஆனால் அவர்களும் சேர்ந்து தயாரித்த பொ. ம. முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி பற்றிய மெல்லியதான மணம் கூட வீசவில்லை.

இது எதனைக் காட்டுகிறது?

தம்மைத் தாமே ஆளும் உரிமை தமிழர்களுக்கு உண்டு. அந்தத் தன்னாட்சி உரிமையைப் பூரணமாக அனுபவிப்பது தான் அவர்களுடைய அரசியல் அபிலாசை. அந்த அபிலாசை நியாயமானதே என்பதை உணரும் அளவுக்கு, சிங்களவர்களில் எவருமே இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

தற்செயலாக அவ்வாறு ஒரு சிந்தனை மனதில் தெறித்தால் கூட அதனை வெளிப்படையாக, அச்சமின்றிக் கூறும் துணிச்சல் எந்த அறிஞருக்கும் இல்லை. சிங்களப் பேரினவாதத்துக்கு அவ்வளவு பயம்!

வடக்கு — கிழக்கைப் பிரித்து மாகாண சபைகளையும் ஒழித்து, கிராம மட்டத்தில் மட்டுமே தமிழர்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று தினேஷ் குணவர்த்தனா கூறுகிறார். அதனால் சிங்களத் தீவிரவாதிகளின் வாக்குகள் அவருக்குச் சென்று விடும் என்ற சுதந்திரக் கட்சியின் அச்சம் நியாயமானது என்று கூட சிலர் வாதிடலாம்.

சிங்கள - பௌத்த பேரினவாதத்தை மீறி எந்தச் சிங்களத் தலைவரும் தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்க முடியாது - என்ற நிலைப்பாட்டையே அந்த வாதம் நிறுவுகிறது. சிங்கள அரசியலின் யதார்த்தமும் அதுவே.

நிலைமை இவ்வாறிருக்க — ஐ. தே. கட்சியும், ஸ்ரீ. ல. சு. கட்சியும் சிங்களவர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற சக்தியற்றவை என்றும்

**உதயகாந்தன்**

தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி ஒன்றே சிங்களவருக்கும், ஸ்ரீலங்காவுக்கும் உரிய கட்சி என்றும் நோக்கும் குணதாச அமரசேகரா, கலாநிதி டபிள்யு எம். கருணாதாச போன்ற "கல்விமான்களும்" இருக்கிறார்கள். பேராசிரியர் நளின் டி. சில்வா போன்ற தீவிரவாதிகளும் அதே அணியிலேயே நிற்கிறார்கள்.

### துரைராசாவின் கருத்து

இங்கே தான் அமரர் பேராசிரியர் அ. துரைராசா அடிக்கடி கூறும் கருத்து ஒன்றைத் தமிழர்கள் ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது.

தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைகளை வழங்கக் கூடாது என்பதில் சிங்கள அரசியல்வாதிகள் மட்டும் அக்கறையுடன் செயற்படவில்லை, தென்னிலங்கையின் கல்விமான்கள், அறிஞர்கள், துறைசார் நிபுணர்கள் என்ற மேல்மட்டத்தினரும் அதே கருத்துடையவர்களாகவே இருக்கிறார்கள். அத்தகையோரே சிங்கள அரசியலுக்குப் பின் நிற்கிறார்கள், சிங்கள அரசியல்வாதிகளையும் வழி நடத்துகிறார்கள் — என்று அமரர் அடிக்கடி கூறுவார்.

அந்த வகையிலேயே பேராசிரியர் நளின் டி. சில்வா முதற்கொண்டு மகாசங்க உயர் பீடாதிபதிகள் உட்பட எஸ். எல். குணசேகரா வரையான மிகப்பெரிய பேரினவாத வட்டம் ஒன்று மக்கள் ஐக்கிய முன்னணியை முன்னுக்குக் கொண்டுவர இத்தேர்தலில் உழைக்கிறது.

இத்தகைய ஒரு தள நிலைமையில் தன்னாட்சி உரிமை வேண்டும் என்ற தமிழர்களின் அபிலாசையை சிங்கள ஸ்ரீலங்கா ஒருபோதும் நிறைவேற்றும் என்று எதிர்பார்ப்பது எப்படி?

வடக்கு - கிழக்கு இணைந்திருப்பதால் நாடு துண்டாகிவிடும் என்று கற்பனை செய்யும் சிங்களப் பேரினவாதிகளும், அரசியல்வாதிகளும் இருக்கும் வரை தன்னாட்சியின் ஆகக் குறைந்த வடிவமான சமஷ்டியைப் பற்றிக் கூட நினைத்தும் பார்க்க முடியாது.

ஆகையால், ஓகஸ்ட் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வென்று சந்திரிகா பிரதமராக வந்தாலும் கூட (தாயார் சிறிமா பத்திரிகைகளுக்கு வழங்கும் பேட்டிகளை நோக்கின் அதுவும் சந்தேகமாகவே உள்ளது) தமிழர்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு என்பது வெறும் கவர்ச்சி வாசகமாகவே இருக்கும்!

மொத்தத்தில் அரசியல் வட்டம் ஒரு சுற்றுச் சுழன்று, சந்திரிகாவின் தந்தை எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் காலத்துக்கு — 38 வருடங்களுக்கு முந்திய காலத்துக்கு — பின்னோக்கிச் செல்லப்போகிறது. அந்த அளவுக்கு தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு எதிரான நஞ்சர்கள் கூட்டம் வளர்கிறது!

ஆகையால் தமிழர்கள் இனிமேல் தான் தமது உரிமைப் போராட்டத்தில் பல மடங்கு உறுதியானவர்களாக இருக்க வேண்டிய தேவை உருவாகப் போகிறது. தமிழர்கள் அதிக விழிப்பாக இருக்க வேண்டியதும் இனித்தான். இதை மறந்து விடலாகாது. ★

**சூரியகாந்தி — உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

## இன்று நடப்பவை

ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி சமாதியடைந்த 81 ஆவது புண்ணிய திதி இன்று (ஞாயிறு) முற்பகல் 9 மணி முதல் 12 மணி வரை யாழ். திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ஐ-க)

★ ★ ★

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இன்று (ஞாயிறு) பிற்பகல் 3 மணிக்கு "அறிவியல் இம்மைக்கா மறுமைக்கா?" என்ற பொருளில் பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா உரை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

"கைவல்யம்" பொருள் பற்றிய அத்வைத வேதாந்த சொற்பொழிவை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் வைத்திய கலாநிதி வ. சின்னப்பு நிகழ்த்துவார். (க)

★ ★ ★

கோப்பாய் சக்தி குழந்தைகள் நாளாந்தக் கவனிப்பு நிலைய பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1மணி முதல் நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. திரு மு. சடாட்சரம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக திரு. ந. சிவசண்முகமூர்த்தி கலந்து கொள்வார். (க-28)

### மருதாம்புல...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான உதவிகளைத் தளராது வாரி வழங்கி வருகின்றனர்.

இவ்வாலயத்தில் தற்போது மாசி மகத் தீர்த்தம், மகா சிவராத்திரி, பங்குனித்திங்கள், வைகாசிப் பொங்கல், நவராத்திரி, கேதார கௌரி விரதம், மகிடாசூரன் போர், பிள்ளையார் கதை, திருவெம்பாவை போன்ற உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயம் முன்னேற்றம் அடைவதற்கு முக்கியமான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் ஆலய சூழலில் உள்ள இளைஞர்கள் தங்கள் பங்களிப்பாக வழங்கி வருகின்றார்கள். இவ்வாலயத்தில் மூர்த்திகளாக விநாயகர், நின்ற கோலத்தில் காட்சி தரும் மதிரகாளி, எழுந்தருளி, வைரவர், வேல், சிம்மம், பலிபீடம் சண்டிகேஸ்வரி ஆகியன உள்ளன.

இவ்வாலயத்தில் இளைஞர் ஒன்று கூடி அம்பிகை மின்னகைப்பு மன்றம் ஒன்றை உருவாக்கி உற்சவ தினங்களில் மின் ஒளி வழங்கி ஆலயத்தைச் சிறப்பித்து வருகின்றார்கள். காலத்துக்குக் காலம் வர்ணம் தீட்டி ஆலயத்தை அழகுபடுத்தி வருகின்றார்கள். இவ்வாலயத்தில் மகளிர் மன்றம் தினமும் திங்கட் கிழமையிலும் விசேட தினங்களிலும் பஜனை நிகழ்ச்சியை சிறப்புற நடத்தி வருகின்றது. இவ்வாலயம் பரிபாலன சபையின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

### குறிஞ்சி மலர்கிறது

புதுடில்லி, ஜூலை 31

குறிஞ்சிப் பூக்களைப் பார்ப்பதற்காக தமிழ்நாடு உதகமண்டலப் பகுதிக்கு கடும் மழையையும் பொருட்படுத்தாது, பெரும் எண்ணிக்கையில் உல்லாசப்பயணிகள் செல்கின்றனர்.

குறிஞ்சி மரம் 12 வருடங்களுக்கு ஒரு தடவையே பூக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-ஐ)

### புலிகளின் குரல் வானொலியில்

31 — 07 — 1994
ஞாயிறு இரவு

★ 8 01 — இசையரங்கம் — செல்வி சு. கோபிதாவின் வயலின் கச்சேரி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் — இனி ஒரு மண் 34 ஆம் அங்கம்

01 — 08 — 1994
திங்கள் காலை

★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப்பாடல்கள்

### மதுவரி காவலர் நேர்முகப்பரீட்சை ஆகஸ்ட் 26 இல்

கொழும்பு ஜூலை 31

மதுவரி காவலர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் 26 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருப்பதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் டபிள்யூ. என். சந்திர ரத்தினா அறிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் இருந்து இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு கடிதங்கள் தாமதமாகக் கிடைத்ததால், அவர்கள் நேர்முகப்பரீட்சைக்குச் சமூகமளிக்க முடியாது போய்விட்[டால் ...]வே புதிய திகதி அறிவிக்கப்[படும் ...] தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றப்பட்ட 82 ஊழியர்கள் மீண்டும் செயலகத்திற்கே மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ். செயலகத்தில் இருந்து பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் 82பேர் யாழ். செயலகத்துக்கே மீண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகத் திட்டம் மூலம் செயலகத்தில் இருந்த பல வேலைகள் பன்முகப்படுத்தப்பட்டு, அந்த வேலைகளைக் கவனிக்க யாழ். செயலகத்தில் இருந்த 100க்கு மேற்பட்ட ஊழியர்கள் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட வேலைகள் பல மீண்டும் செயலகத்திலே செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும் —

பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு சம்பளம் வழங்க மாகாணசபை மறுப்பு தெரிவித்ததாலும் —

இடமாற்றம் பெற்றவர்களில் 82 ஊழியர்கள் திரும்பவும் செயலகத்துக்கே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சம்பளத்தை வழங்கத் தேவையான பணத்தை பெறுவது தொடர்பாக யாழ். அரச அதிபர் கொழும்பில் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

### இசைக்கச்சேரி

நல்லை ஆதீனம் நடத்தும் இசைக்கச்சேரி ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

இசைக்கச்சேரியில் சங்கீத பூஷணம் திருமதி. ஜெயராஜசிங்கம் பாட்டு, திரு எம்.என். செல்லத்துரை மிருதங்கம், [...] வயலின் ஆகியன இடம்பெறும். (க-101)

### எதிரியின் சன்னங்கள்..

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் வழிநடத்துவதை எம்மால் உணர முடிகிறது.

இலமுற்ற தாய பீற்றர் தேவாலயத்தினுள் உறையும் தூய ஒளியும், கோட்டை முனியப்பரின் தெய்வீக அரவணைப்பும்; மண்மீட்பில் இன்னுயிர் ஈந்த தியாக மாவீரரின் தண்ணளியும் வண்ணமுற எம்மை வாழ்த்தி நிற்கின்றன.

யாழ்ப்பாண நூல்நிலையம் மீண்டும் புதுப் பொலிவு பெறும் குறவுள பூக்காவும் அணைக்கூடமும், மணிக்கூட்டுக் கோபுரமும், புதுமணமும், புதுப் பொலிவும், இனிய நாதமும் எழுப்பும் பண்ணைக் கடலில் இருந்து வரும் இளம் தென்றல் விடுதலைத் தென்றலாக எம்மையும் எமது சிறார்களையும் வருடும். எல்லா வளமும் பெற்று ஒரு பொற்காப்புமிக்கமாக நாம் வாழ்வோம்.

"என்னி நிக் தொண்டுக் இன்பம் ஏராந்தம்"

"Live in Service Gold and Free"

— College Song. ★

### எம் மண்ணுக்கும்..

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானது.

சிறுதுளிகள் பல சேர்ந்து வெள்ளம் உருவாகுவது போல் பத்தியின் மடியில் தவண்டல மணிகள் தம்மால் இயன்றதைத் தனித்தனியாகவும், கூட்டாகவும் செய்ய முன்வருகின்ற போது — முப்பதிகள் மேற்கொள்கின்ற போது சற்றே பொலிவிழந்து களையிழந்திருக்கும் எமது கலைக்கோயிலை மீண்டும் கட்டியெழுப்பி உயிர்பெறச் செய்வதில் பங்களிப்பவர்கள் அனைவருக்கும் ஆத்மதிருப்தி ஏற்படும் என்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையிலும் மனம் தளராது நாம் சார்ந்த பல்வேறு துறைகளினூடாக இந்த மண்ணிற்கும், மக்களுக்கும் கடமை செய்யும் பல மத்திய மணிகளை நினைத்துப் பார்க்கின்றபோது எமது அன்னை நிச்சயமாக ஆனந்தக் கண்ணீர் வடிப்பாள். இன்று இத்தாயின் மடியில் நடக்கும் பெருவிழா இதற்குச் சான்று பகரட்டும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வி ஜெயந்தி ஜெயரட்ணம்

(உடுவில் மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி)

மலர்வு: 20 – 10 – 1969
உதிர்வு: 31 – 07 – 1988

சின்னஞ் சிறு சிட்டாக சிரித்துப் பறந்தவளே!
அன்புச் சோலை தனில் அகமகிழ்ந்து வளர்ந்தவளே
வாசமலர் நீ வாடிவிழ வந்த தென்ன
உன் சிரிப்பும் உன் பேச்சும் எம் முன்னே
உறக்கத்திலும் தோன்றிட எங்கு சென்றாய் நீ
பாரினில் நீயிருந்த பசுமையான நாட்களுக்காய்
பரம பிதாவிற்கு பாமாலை சூடுகின்றோம்:

உமது பிரிவால் வாடும்;
அப்பா, அம்மா, அண்ணாமார்.

இராமலிங்கம் வீதி,
உடுவில்.

(32135)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் பரஞ்சோதி

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலம்சென்ற ஆறுமுகம் பரஞ்சோதியின் சமக்கிரியைகள் 29-07-94 இல் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை.

அன்னாரது ஈமக்கிரியைகள் 42/9 அலெக்ஸ் மாடி, ராசேந்திரா வீதி, குருநகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று 31-07-94 காலை 8 மணிக்கு நடைபெற்று, கொம்பையன் மணல் மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ஆ. சந்திரன்
(சகோதரன்)

42/9, அலெக்ஸ் மாடி,
ராசேந்திரா வீதி,
குருநகர்.

(32178)

## ஸ்ரீபன் மகேந்திரா போல் (S M PAUL)

ஸ்ரீபன் மகேந்திரா போல் 28-07-94 வியாழ கிழமை காலமானார்.

இவர் திரு. திருமதி எஸ். ஏ. போல், மேரி தெரேசா அவர்களின் மகனும், திருமதி கொன்சி பெனடிக்ரா வின் கணவரும், தயாளினி பிரதாப், தர்மினி ஆகியோரின் தந்தையும் செய்வேந்திரா, குலேந்திரா, பாலேந்திரா, அருட் திரு ஜீவா போல் அ. ம. தி. றெஜினோல்ட், ஜேய், சுரான், றஞ்சித், அருட் செல்வன் எமில் போல் ஆகியோரின் சகோதரனுமாவார்.

இவரது இறுதிச்சடங்கு ஞாயிற்றுக்கிழமை (31-07-94) மாலை 3 மணிக்கு யாழ். மரியன்னைப் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியோடு நடைபெறும்.

இறைவனில் என்றும் இளைப்பாறுவாராக

தகவல்;
எஸ். ஏ. போல்
(தகப்பன்)

51/1, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்

(32172)

## விசுவலிங்கம் நாகரத்தினம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

திருநெல்வேலி- வடக்கு, சைவப்பிரகாச சாலை ஒழுங்கையைச் சேர்ந்த விசுவலிங்கம் நாகரத்தினம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) கொழும்பில் 28-07-1994 அன்று காலமானார்.

அன்னார் நிலவதியின் அன்புக் கணவரும், ரட்ண குமார் (ஸ்ரீலங்கா ரெலிகொம், கொழும்பு), சிவகுமார் (ஜேர்மனி), தேவகுமாரி (லண்டன்), உதயகுமார், கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் சோதிலிங்கம் (லண்டன்), தமயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. சேகர்

66, மணத்தறை லேன்,
திருநெல்வேலி.

(32177)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 31 - 07 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மீன்பாடும்···

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டில் உள்ளது.

மட்டக்களப்பின் அமைதியை உறுதி செய்கிறோம் என்னும் பெயரில் இராணுவத்தினர் அங்கு மேற்கொண்டு வரும் நடவடிக்கையின் கடுமையை கூறவே முடியாது.

15 வயதுக்கு மேற்பட்ட தமிழ் மகனாக அங்கு வாழும் ஒருவர் சந்திக்கும் கட்டுப்பாடுகள் ஏராளம்: 15 வயதுக்கு மேற்பட்டோர் அங்கு ஸ்பெஷல் அடையாள அட்டை பெற வேண்டும்.

மட்டக்களப்பு அரச அதிபரையும், கத்தோலிக்க ஆயரையும் தவிர அங்குள்ள அனைவரையும் உடல்பரிசோதனை செய்ய நாம் அனுமதிப்போம் என்று அங்குள்ள இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

தேர்தல்களைக் குழப்புவதற்காக 75 போராளிகளை விடுதலைப்புலிகள் மட்டக்களப்புக்கு அனுப்பியுள்ளதாக படையினர் சந்தேகிக்கின்றனர் — இவ்வாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-ஐ-4)

# ஆலய உற்சவங்கள்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த லட்சார்ச்சனை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி ஆகஸ்ட் 9 ஆம் திகதி வரை நடைபெறும்.

தினமும் வீ.கே. கானமூர்த்தி புதல்வர் குழுவின் நாதஸ்வரக் கச்சேரியும் திரு. த. சிவகுமாரனின் சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (ஐ)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வீரமகாளி அம்மன் ஆலயத்தில் இன்று ஞாயிறு ஸ்ரீ துர்க்கை அம்பாளின் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு நடைபெறும்

எதிர்வரும் 8 ஆம் திகதி இரதோற்சவமும் மறு நாள் தீர்த்தோற்சவமும் அதனைத் தொடர்ந்து ஆடிப்பூரத் திருசோபன விழாவும் இடம் பெறும். (ஓ)

★ ★ ★

கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நடைபெறும் உற்சவ தினத்தில் தினமும் இரவு 7 மணிக்கு திரு. ஆறு திருமுருகன் தொடர் சொற்பொழிவு ஆற்றுவார். (ஓ)

★ ★ ★

வண். வடமேற்கு நாச்சிமார் பதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று (ஞாயிறு) ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். அம்பாள் வெளிவீதி உலா வரும் காட்சி இரவு 8 மணிக்கு நடைபெறும். (க)

★ ★ ★

ஆவரங்கால் நடராச இராமலிங்க சுவாமி கோயில் ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்மன் வருடாந்த மகோற்சவம் இன்று ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இரதோற்சவம் ஓகஸ்ட் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாள் காலை 9 மணிக்கும் நடைபெறும்:

திருவிழா நாட்களில் மாலை 6-30 முதல் 7-30 மணி வரை திரு. க. நாகேஸ்வரனின் சமயச் சொற்பொழி இடம் பெறும். (க)

★ ★ ★

வண். வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயமஹோற்சவம் இன்று ஞாயிறு முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த்திருவிழா ஓகஸ்ட் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா 9 ஆம் திகதி காலை 9 மணிக்கும் நடைபெறும். (க)

★ ★ ★

கந்தரோடை வற்றாக்கைப் பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாத சுவாமி கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (க-152)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான ஆடிப்பூர மஹோற்சவ நாட்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் 10 தினங்கள் இரவு 7 மணி முதல் 8 மணி வரை திரு. பொன். குமாரசாமியின் விசேட சொற்பொழி இடம் பெறும். (க)

★ ★ ★

சித்தன்கேணி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஞாயிறு தொடக்கம் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

ஓகஸ்ட் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அஷ்டோத்தர சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி வீதி வலம் வருதலும் பகல் அன்னதானமும் இடம் பெறும். (க-152)

★ ★ ★

நல்லூர் சட்டநாதர் கோயில் அம்மன் மஹோற்சவம் இன்று ஞாயிறு நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

ஓகஸ்ட் 8 ஆம் திகதி காலை 8 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

உற்சவ நாட்களில் தினமும் இரவு 7 மணி முதல் 8 மணி வரை இராமாயணம் பற்றிய தொடர் சொற்பொழிவை கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ் நிகழ்த்துவார். (--111)

## ராஜினாமா!

பியகம பொலீஸ் நிலையத்தின் ஆயுதக் களஞ்சியத்தில் உள்ள ஆயுதங்களை ஐ. தே. க. எம். பி யான காமினி லொக்குகேயிடம் ஒப்படைக்குமாறு அண்மையில் அரசவிடுத்த உத்தரவை ஏற்க மறுத்து அந்தப் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## தேர்தல் பிரசாரத்துக்கு அரச வாகனம்

கொழும்பு, ஜூலை 31

அரசுக்குச் சொந்தமான வாகனங்களையும் மற்றும் உடமைகளையும் ஐ.தே.கட்சி தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது குறித்துப் பரிசீலனை செய்ய விசேட பிரிவு ஒன்றை அமைத்துள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது. (இ-ஐ-6)

G. C. C.

வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(யாழ். அரசாங்க வைத்தியசாலை பழைய O. P. Dக்கு முன்பாக)

கண், காது, மூக்கு தொண்டை (ENT), முறிவு, மகப்பேறு, சத்திர சிகிச்சை, பொதுவைத்தியம், சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம், சருமரோகம் என்பவற்றிற்கு விசேடவைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்படுவதுடன் E. C. G மற்றும் ஆய்வுகூட சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

நிர்வாகி

(32174)

புத்தூர்

அருள்மிகு ஸ்ரீவிசாலாட்சி சமேத விஸ்வநாத தேவஸ்தானம்

(புத்தூர் சிவன்)

வருடாந்த மஹோற்சவ விசேட விழாக்கள்

| | | |
|---|---|---|
| 31-07-94 | கொடியேற்றம் | பகல் 12 மணி |
| 07-08-94 | மஞ்சம் சப்பரம் | பகல் 12 மணி இரவு 8-30 (மூன்று வாயில்) |
| 08-08-94 | தேர் உலா | காலை 9-30 மணி |
| 09-08-94 | தீர்த்தம் | பகல் 12-30 மணி |
| 10-08-94 | பூங்காவன உற்சவமும் திருக்கல்யாண வைபவமும் இரவு 6-30 மணியிலிருந்து ஆரம்பம் | |

மஹோற்சவம் நடைபெறும் 10 நாட்களிலும் நல்லைக்குரு மணியின் பிரதம சிஷ்யர் சி. வை. நித்தியானந்தசர்மா அவர்கள் மகாபாரதம் என்னும் பொருள் பற்றி தொடர் சொற்பொழிவு ஆற்றுவார். நேரம் தினமும் இரவு 7மணி முதல் 8மணி வரை

தேர், பூங்காவன உற்சவங்களில் ஈழத்தின் புகழ் பெற்ற அனைத்து தவில் நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரி நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

தேவஸ்தானம்

விளம்பர அன்பளிப்பு;
சிவன் தொண்டன்

[7567]

# 5-ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 03 – 10 – 1933



உதிர்வு: 26 – 07 – 1989

அமரர்

## ஸ்ரீமான் குமாரசாமி துரைராஜா

(ஓய்வு பெற்ற ஆங்கிலத் தட்டெழுத்தாளரும், லிகிதரும், கமலநல சேவைத் திணைக்களம் திருகோணமலை)

திதி: 31 – 07 – 1994

ஈசனின் அருள் தரும் இனிய முகமும்
ஆதவன் ஒளிவீசும் நளிய அகமும்
சாற்றிடுதே உம் புகழை நிதமும்! அது
தேற்றிடுதே நம் நினைவுகளை அனுதினமும்.

என்றும் தங்கள் நினைவுகளுடன்;
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்.

44, புளியடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[32168]

# சுதந்திரக் கட்சிக்காரரின் தலையை கோரும் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 31

''நீர்கொழும்புப் பகுதியில் உள்ள சுதந்திரக் கட்சியினரைத் தேடிப் பிடித்து அவர்களின் தலையை வெட்டி என்னிடம் கொண்டு வாருங்கள்''

கடந்த 25 ஆம் திகதி நீர்கொழும்புத் தொகுதியின் திட்டம் ஒன்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய ராஜாங்க அமைச்சர் சரத் சந்திர ராஜகருணா முன் கண்டவாறு தனது உரையில் கூறியதாக முன்னாள் எம். பி யான ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளை செய்தியாளர் சேலைக்குத் தெரிவித்தார். (இ-ஐ-6)

## மாட்டு வண்டி சவாரி

அளவெட்டி பெருமாக் கடவைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபை நடத்தும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி இன்று (ஞாயிறு) பிற்பகல் 2 மணி முதல் கந்தரோடை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-89)

## குழந்தை மரணம்

புதுடில்லி, ஜூலை 31

இந்தியாவின் புதுடில்லியில் பெய்து வரும் கடும்மழையால் இயல்பு வாழ்க்கை நேற்று பாதிக்கப்பட்டது.

மழையால் சிறு குழந்தை ஒன்று உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சென்னையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் வெங்கடராமனின் இல்லத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நூறு பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை — கோயம்புத்தூரில் வெங்கட்ராமனின் கொடும்பாவியை எரிக்க முயன்ற காங்கிரஸ் தொண்டர்கள் நூறுபேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஐ)

## மீனவரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் தமது தொழிலை தொடர முடியாத நிலையில் உள்ளனர்.

மட்டக்களப்பு வாவிக்கு அருகில் உள்ள இறால் ஓடை ஆற்றில் மீன் பிடிப்பதற்கும் ஸ்ரீலங்கா படையினர் தடைவிதித்துள்ளனர். முன்னர் பகலில் சிறிது நேரம் மீன் பிடிக்கலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவ்வறிவிப்பு வெளியாகி சில தினங்களில் பகலிலோ அல்லது இரவிலோ எவரும் மீன் பிடிக்கக் கூடாது என அறிவிக்கப்பட்டு கடந்த வாரம் இறால் ஓடை ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீது ஸ்ரீலங்கா படையினர் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். இதனையடுத்து இங்கே எவரும் மீன் பிடிக்கச் செல்வதில்லை; (இ-4)

அரியாலை

சிற்றம்பலம் விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக

உலக விளையாட்டுப் படக்காட்சி

காலம்: 31 - 07 - 1994 மாலை 6-30 மணிக்கு
இடம்: கழக மைதானம் (கனகரட்ணம் ம. ம. வி. அருகில்)


1. உலகக் கோப்பைக்கான உதைபந்தாட்டம் 1994 இத்தாலி எதிர் பிறேசில்
2. உலகச் சாம்பியன் மெய்வல்லுநர் போட்டி (I. A. A. F.)

நுழைவு அனுமதி ரூபா 10/- சிறுவர் ரூபா 5/-

- நிர்வாகிகள்:

[32173]

# 29 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் அரியரத்தினம் சிவேந்திரன்

(உரிமையாளர், அரியரத்தினம் ஸ்ரோர்ஸ் மாத்தறை)

மலர்வு: 6-2-1939
உதிர்வு: 3-7-1994

3-7-94 அன்று சிவபதமடைந்த அன்னாரது பூதவுடலை மாத்தறையில் இருந்து கொழும்பிற்கும், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் கொண்டு வருவதற்கு பேருதவி புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட உறவினர், நண்பர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் மற்றும் மலர் வளையங்கள், மரணவசீ சார்த்தியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், எமது துயரத்தில் பங்கு கொண்டு எல்லா வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவரது இல்லத்தில் இன்று (31-7-94) அந்தியேட்டி கிரியைகள் நடைபெறும்;

ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள்

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(32175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org